11 My 1931

N31·15·5-7
210464

ஓம்

# ஞானசாகரம்

## (அறிவுக்கடல்)

## JNANASAGARAM

இஃது

இருபத்தொன்பது ஆண்டுகளாக நடைபெறுந்

தனிச் செந்தமிழ் வெளியீடு

**A BI-MONTHLY**

பதுமம், ௧௫. | பிரமோதூத௵ ஆவணி, புரட்டாசி, ஐப்பசி
| இதழ்கள், ௫, ௬, ௭.

### பொருளடக்கம்

பொதுநிலைக்கழக இருபதாம் ஆண்டு நிறைவு
விழா அறிக்கையும்
'அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையும் ஞானயோக
மும்' என்னுந் தலைமைப் பேருரையும்

ஆசிரியர்:

மறைமலையடிகள் என்னும்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,

SWAMI VEDACHALAM,

பொதுநிலைக்கழக குரு,

பல்லாவரம்

PALLAVARAM

பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள

டி. எம். அச்சுக்கூடத்திற்

T. M. PRESS

பதிப்பிடப்பட்டது;

11th, May, 1931.

ஒருபதுமக் கையொப்பம்] [நான்கு ரூபா

All Rights Reserved.

## ஞானசாகரக் கையொப்ப நண்ப

பொதுநிலைக்கழக ஆண்டுவிழா, இனிது நிறைவேறியபின்,
யினையும் எமது தலைமைப்பேருரையினையும் எழுதி அச்சிடுவி
யாம் ஈடுபட்டிருந்தேம். அப்போது சடுதியில் திருநெல்வேலிமாக
எப்பிரல், 4, 5-ஆம் நாட்களிற் கூட்டப்பட்ட திருநெல்வேலிச் சி
முதல் மகாநாட்டுக்கு யாம் அவைத்தலைவராகச் செல்லவேண்டுவதாயி
ஞலும், யாம் தனியிருந்தே எம்முடைய தமிழ்த்தொண்டு சிலத்
செய்யவேண்டி யிருப்பதாலும், ஞானசாகரத்தையும் பொதுநிலைக்க
அறிக்கையினையுஞ் சிறிது காலந்தாழ்த்து இப்போதுதான் வெளியிட
பெற்றேம். ஞானசாகரமும் அறிக்கையும் ஏன் வரவில்லையென்று அடுத்
துக் கேட்டுக் கடிதம் எழுதின நண்பர்கட்கெல்லாம் யாம் விடையெழுதாதிரு
தமைக்காக, அவர்கள் வருந்தாதிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேம். ஒரு
தபால் அட்டை எழுதுதற்கு 15 முதல் 20 நிமிஷங்களும், ஒருகடிதம் எழுதுவ
தற்கு அரைமணிமுதல் முக்கால்மணி நேரம் வரையிலுங் காலங் கழிகின்றது.
ஆகவே, வந்த கடிதங்களுக்கு விடையெழுதிக்கொண் டிருந்தால் ஞானசாகரம்
முதலிய நூலெழுதும் முயற்சி தடைப்படுமாதலால், அந் நேரத்தை நூலெழு
தும் முயற்சியிலேயே பயன்படுத்தலானேம். அன்பர்கள் எழு[illegible]தங்க
ளில் இன்றியமையாதனவற்றிற்கு மட்டும் உடனுக்குடன் விடை எ[illegible]துவேம்
என்பதையும் இதனால் அன்பர்கட்கு அறிவித்துக்கொள்கின்றேம்.

ஞானசாகர ஆசிரியர்.

---

## பொதுநிலைக்கழக இருபத்தோராம் ஆண்டு
## நிறைவுவிழாப் பேரவை

இறைவன் அருளாலும் அன்பர்கள் உதவியாலும் பொதுநிலைக்கழகத்தின் இருபதாம் ஆண்டு நிறைவுவிழா யாம் எதிர்பார்த்ததற்குமேல் மிகவுஞ் சிறப்பாக இனிது நிறைவேறியதும், அதனில் வந்து கலந்துகொண்ட அன்பர்களெல்லாரும் அதன் ஏற்பாடுகளையும் அவையில் நடந்த விரிவுரைகளையுங் கண்டு கேட்டு மகிழ்ந்து பாராட்டுவதும் எவரும் அறிந்தனவேயாம். இப் பொதுநிலைக்கழக விழாப் பேரவையைக் கூட்டுவதன் நோக்கம் இத் தமிழ்நாட்டகத்துள்ள தமிழ் கற்றார் எல்லாரையும் ஒருங்குகூட்டி அவர்க்குட் கருத்தொற்றுமையினை விளைவிப்பதும், பொருள்வருவாயில் இடர்ப்பாடில்லாதிருந்து அவர்கள் இந்நாட்டின் முன்னேற்றத்திற்குரிய பல துறைகளிலும் நன்கு முயலும்படி உதவிசெய்வதும், இங்ஙனந் தமிழறிஞரைப் பயன்படுத்து முகத்தால் இத் தமிழ்நாட்டவரெல்லாருந் தமது தமிழ்மொழியிலுந், தமது சமயஉணர்ச்சியிலுந், தமது வாழ்க்கை செலுத்து முறையிலும், மேன்மேற் சிறப்பதற்கான வழி துறைகளைக் காட்டுவதும் ஆகும்; ஆதலால், விரிவுரை செய்பவர்களா யிருந்தாலும் இல்லாவிட்டாலுந் தமிழ்கற்றவர்கள் எல்லாருங் கழகவிழாவில் தவறாமல் வந்து கலந்துகொள்ளும்படி வேண்டப்படுகின்றார்கள். அன்பர்களிடமிருந்து தக்கபடி பொருளுதவி கிடைக்குமானல் விழாவுக்கு வருங் கற்றவர்கள் எல்லார்க்கும் போகவர ஆகும் வழிச்செலவைக் கொடுத்துவிடலாம்.

பொதுநிலைக்கழக விழாவை ஓராண்டு பல்லாவரத்திற் கழக நிலையத்திலும், அதற்கடுத்த ஆண்டு வெளியூரொன்றிலுமாக மாறி மாறி நடத்தினல், அது தமிழ்நாட்டிற் பலவிடங்களிலும் உள்ள நந் தமிழ்மக்களுக்குப் பெரிதும் பயன்படும். ஆனல், வெளியூரில் அதனை நடத்துவதென்றல் அவ் வூரிலுள்ளார், அதனை [illegible]க்கும் பொறுப்பு முழுதுஞ் செலவு முழுதுங் கழக ஆசிரியர் குறிப்
[illegible] [illegible]ள்ளல்வேண்டும். எல்லாச் செலவுகளுக்குங் குறைந்தது
[illegible]ரூபா பிடிக்கும். இத் தொகையை அன்பர்களிட
[illegible]ண்டு, இக் கழகத்தின் இருபத்தோராம் ஆண்டு

25 MAY 1931

ஓம்

பல்லாவரம்

# பொதுநிலைக் கழக நிலையத்து
# இருபதாம் ஆண்டு விழா அறிக்கை

---

“திணைத்தனை யுள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங்காண்டொறும்பேசுந்தோறும்எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ”

“கற்பனை கடந்தசோதி கருணையே உருவம்ஆகி
அற்புதக் கோலம்நீடி அருமறைச் சிரத்தின்மேலாஞ்
சிற்பர வியோமம்ஆகுந் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி”

---

## கழக நோக்க முன்னுரை

‘பொதுநிலைக் கழகம்’ அல்லது ‘சமரச சன்மார்க்க சங்கம்’ என்பது **ஆசிரியர் மறைமலையடிகளால் 1911-ம் ஆண்டு** ஏப்பிரல் திங்கள் **22**-ம் நாள் பல்லாவரத்தின்கண் நிலைபெறுத்தப்பட்டது.

தமிழ் நாட்டிலுள்ள தமிழ்மக்கள் தமக்கே உரிய பண்டைப் பேராசிரியரின் அருளுரைகளின் வழிநில்லாது, பிற்காலத்தில் இடையே புகுந்த புராணகதைகளின் வயப்பட்டுப், பல்வகைச் சாதிப்பிரிவுகளும், பல்வகைச்சமயப்பிரிவுகளும், பல்வேறுவழக்கவொழுக்கங்களும் உடையராய் ஒருவரோடொருவர் பெரிதும் மாறுகொண்டு, அன்பு அருள் ஒழுக்கங்களை முற்றும் மறந்து, கல்வியும் ஆராய்ச்சியுமில்லாதவர்களாய் மிகச் சீர்குலைந்து நிற்பாராயினர். தெய்வத் தொல்லாசிரியர்களாகிய தொல்காப்பியர், திருவள்ளுவர், நக்கீரர், மாணிக்கவாசகர், திருமூலர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், பட்டினத்தடிகள், மெய்கண்டதேவர், முதலாயினோரும், அவர்க்குப்பின் அப்பழைய மரபு

பிழையாது தாயுமான அடிகளும், அவ...
இராமலிங்கஅடிகளுந் தோன்றி, எல்லா உலகத்து
உயிர்க்கும் ஒரே முழுமுதற் கடவுள் தலைவராய்
அசைத்தும் அறிவித்தும் வரும் அருட்பெருந்
தலைவராகிய தந்தைக்கு எல்லா உயிர்களும் அரு... பிள்ளை
களாயிருக்கும் உண்மையையும் நெஞ்சங்கரைக்குஞ் செஞ்சொற் பாடல்களாற் பலகாலும் எடுத்து அறிவுறுத்தி, இடையிலே கலைந்துபோன அன்பொழுக்க அருளொழுக்கங்களை மீண்டும் ஒன்றுசேர்த்து நிலைபெறுத்துவாராயினர். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் நம் தவ ஆசிரியர் **திருமூலரின்** மெய்யுரையினைக் கைக்கொண்டு, ஒரே முழுமுதற்கடவுளை, அன்பினால் அகங்கரைந்து உருகி வணங்கும் வணக்கமும், அதனால் உயிர்களெல்லாம் அவன் அருமை மக்களே ஆவர் என்னும் உணர்ச்சியுங் கிளர்ந்து விளங்கினாலன்றி அன்பும் அருளும் இந் நிலவுலகில் நிலைபெறமாட்டா அன்றோ? இதுபற்றியே **இராமலிங்க அடிகளார்** 'சமரச சன்மார்க்க சங்கம்' அல்லது 'பொது நிலைக் கழகம்' என்பதனை வகுத்து எல்லாத் தேயத்தார்க்கும் எல்லாச் சாதியார்க்கும் எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவாய் நின்று அருள்வெளியிலே ஆடல்புரியும் அம்பலவாணனாகிய ஒரு தனித் தலைமைக்கடவுளின் வழிபாட்டை வலியுறுத்தி, அவ்வாற்றாற் சாதிப்பிரிவு சமயப்பிரிவு சாதிச்செருக்கு சமயச்செருக்கு முதலிய பொல்லாங்குகளை அறவே ஒழித்து, மேலே காட்டிய தெய்வத் தொல்லாசிரியரின் அருளொழுக்க முறைகளை எல்லா மக்களிடையும் பரவச் செய்தற்கு அரிய பெரிய ஏற்பாடுகளெல்லாஞ் செய்துவைத்து மறைந்தனர்.

ஆனால், அவர்கள் செய்துவைத்த அருமருந்தன்ன ஏற்பாடுகளுங்கூட, நாளடைவில் அறிவு அன்பு அருள் இல்லா நம்மக்களாற் பின்னும் நிலைகுலைக்கப்பட்டுச் சாதிவேற்றுமை சமயவேற்றுமைகளுக்கும், அவற்றால் வரும் போராட்டங்களுக்கும் இடனாக மாற்றப்பட்டு வருவதை வடலூர் செல்லும் அறிஞர் கண்டு வருந்தாநிற்கின்றனர். இங்ஙனமாக நம் தெய்வஆசிரியர்கள் நம் மக்கள் முன்னேற்றத்தின்பொருட்டுக் கரைகடந்த பேரருளாற் காலங்கடோறும் புதுக்கிவரும் பழைய தெய்வக்கோட்பாடுகள்



இனியாயினுஞ் சிதைவுறாமல் உரம்பெற்றுநின்று நம்மனோரை முன்னேற்றவேண்டும் என்னும் இரக்கஎண்ணங் கொண்டே, ஆசிரியர் மறைமலையடிகள் இந்நாகரிக காலத்துக்கேற்ற நாகரிக முறையில் அத்தெய்வ ஆசிரியர் கோட்பாடுகளைப் பின்னும் புதுக்கி இக்கழக வாயிலாக எங்கும் பரப்பி வருகின்றார்கள்.

## கடவுள் உணர்ச்சியின் இன்றியமையாமை

ஈ எறும்பு முதல் மக்கள் தேவர் ஈறான எல்லா உயிர்களின் நெஞ்சத் தாமரையினுள் விளங்கா நின்ற அருள் வெளியிலும், ஞாயிறு திங்கள் முதலான எண்ணிறந்த உலகங்களையெல்லாந் தன்னகத்து அடக்கி விளங்கும் நுண்ணிய அறிவுவெளி யாகிய சிற்றம்பலத்திலும் நின்று எல்லாம்வல்ல இறைவன் இடையறாது தான் ஆடி எல்லாவற்றையும் ஆட்டுவிக்கின்றான். இவ்வாட்டம் எதன்பொருட்டு நடைபெறுகின்றதெனின், சிற்றுயிர்களாகிய நம் அறிவைக் கவிந்திருக்கும் ஆணவ வல்லிருளை நீக்கி, அம்முகத்தால் நமக்குப் பேரறிவையும் பேரின்பத்தையும் வழங்குதற்பொருட்டே அது நடைபெறா நிற்கின்றது. இங்ஙனம் நாம் கேளாதிருக்கையிலேயும் எவராலும் படைக்க இயலாத மிக வியப்பான இவ் வுடம்புகளையும், நாம் இவ் வுடம்புகளோடு இணைந்திருந்து உலவிப் பலவகையான இன்பங்களை நுகருதற்கு இவ் வுலகத்தையும், இதிற் பலபல பண்டங்களையும் நாம் பிறவி எடுப்பதற்கு முன்னமே அமைத்துவைத்து, இப் பிறவியிலேயும் இனி வரும் பிறவிகளிலேயும் நம்முயிர்க்கு ஓர் ஒப்பற்ற துணைவனாயிருந்து நம்மை ஒவ்வொரு நொடியும் ஓவாது பாதுகாத்துவரும் ஓயாத அருளியக்கத்தையே அம்பலவாணன் றன் இன்பக் கூத்தானது அறிவுறுத்துகின்றது. இதன் உண்மை இன்னும் விரிவாக ஆசிரியரின் தலைமைப் பேருரையின்கட் காணப்படும். இங்ஙனம் எல்லாம் வல்ல இறைவன்றன் அருளியக்கத்தை எல்லாரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி தெரிவிக்கும் அம்பலவாணன் திருவுருவ வழிபாட்டைவிடச் சிறந்ததும், சிற்றுயிர்களாகிய நமக்கு இம்மை மறுமைக்குரிய எல்லா நலங்களையும் எளிதிற் பயப்பதும் வேறு ஏதுமே இல்லை. இறைவனை அருளியக்க நிலையில் [illegible]

210464

படும் இஃது எந்தச் சமயத்தார்க்கேனும் எந்தச் சாதியார்க்கேனும் எந்தத் தேயத்தார்க்கேனும் தனி உரிமையாக நிற்பதன்று. உண்மையறிவும் உண்மையன்பு முடையாரெவராயினும், அவர்க்கெல்லாம் இவ்வழிபாடு மெய்யுரிமையுடையதாகும். ஆதலினாற்றான், முனிவர்களுந் தேவர்களுஞ் சித்தர்களும் ஞானிகளும் யோகிகளும் சமயாசிரியர்களும் அரசர்களுங் கற்றவர்களும் மற்றவர்களுமெல்லாம் முழுமுதற்கடவுளை இந்த நிலையில் வைத்தே வழிபட்டுத் தாம் தாம் விரும்பிய இம்மை மறுமை நலங்களைப் பெற்று வந்திருக்கின்றார்கள். இவ்வருட்பேருண்மை,

“விண்ணவர் இந்திரன் பிரமன் நாரதாதி
 விளங்கு சத்த ரிஷிகள்கண வீணை வல்லோர்
எண்ணரிய சித்தர் மனுவாதி வேந்தர்
 இருக்காதி மறைமுனிவ ரெல்லாம் இந்தக்
கண்ணகன் ஞாலம் மதிக்கத் தானேஉள்ளங்
 கையில் நெல்லிக் கனிபோலக் காட்சியாகத்
திண்ணிய நல்லறிவால் இச்சமயத் தன்றோ
 செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தா ரென்றம்”

என்று **தாயுமான அடிகள்** அருளிச் செய்தனர். இன்னும், இவ்வருள் வடிவத்தினைப் பண்டைநாளி லிருந்த எல்லாச் சமயத்தாரும் ஏதொரு வேறுபாடுமின்றி வந்து வழிபட்டு வந்தனர் என்பது பின்னுமவர்,

“சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
 சமயசங் கேதப் பொருளுந் தானொன்றாகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்டதில்லை
 பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்தபோது அங்கு
என்மார்க்க மிருக்குது எல்லாம் வெளியேயென்ன
 எச்சமயத் தவர்களும் வந்து இறைஞ்சாநிற்பர்”

என்று அருளிச்செய்தவாற்றால் இனிது விளங்காநிற்கும்.

அஃதுண்மையே யாயினுங், கடவுளானவர் நாம் நமது முயற்சியாற் சீர்திருந்தி மேலேறுதற்கு வேண்டும் இவ் உடம்பு முதலிய கருவிகளையும் இவ்வுலகத்துப் பல பண்டங்களையும் அமைத்துக்கொடுத்திருத்தலால், அவற்றைக்கொண்டு நாம் நமது முயற்சியைப் பெருகச்செய்து மேலேறுதலே வேண்டற் பாலது;



அதனைவிடுத்து எந்நேரமுங் கடவுளே கடவுளேயென்று பேசுவதும் எழுதுவதும் அதனை வழிபடுவதும் ஆகிய செயல்களெல்லாம் பயனில் முயற்சிகளேயாகு மாதலால், அவை விடற்பாலவெனின்; நன்று சொன்னாய்; நாம் ஒரு நன்முயற்சியினைச் செய்து மேலேறுதற்கு, அறிவும் ஆற்றலும் வேண்டுமன்றோ? அறிவும் ஆற்றலும் இல்லாதவர்க்கு எத்தகைய சிறுமுயற்சியுங் கைகூடாது. இனி, நாமோ முன்நாட்களில் முன்னேரங்களில் நடந்தவைகளை மறந்துபோகின்றோம்; இப்போது நம்மைச்சூழ நடப்பவைகளையுங் கண்ணெதிரே கண்டாலன்றி அவற்றின் உண்மையை அறியமாட்டாதவர்களா யிருக்கின்றோம்; இங்ஙனமே அடுத்துவரும் நேரங்களிலும் அடுத்துவரும் நாட்களிலும் நடக்கப்போவனவற்றை அறிய மாட்டாதவர்களா யிருக்கின்றோம். இவ்வளவு சிறுகிய அறிவுடையரா யிருத்தலோடு, பசி காமம் சினம் துயரம் கலக்கம் பகை முதலிய இழிகுணங்கள் தோன்றுங் காலங்களிற் சிறிதாயிருக்கும் இச்சிற்றறிவும் மங்கி மறைந்துபோகின்றது. அதுவேயுமன்றிப், பசியெடுத்தகாலங்களில் உணவுகிடையாவிட்டாலும், நாவறண்ட நேரங்களில் நீர் அருந்தாவிட்டாலும் எத்துணை வலிமையுடையவர்களும் இளைத்துக் களைத்துக் கண் பஞ்சடைந்து காது செவிடாகி முயற்சி அவிந்து அடங்கிப்போதலை நாம் பார்த்து வருகின்றோம். இத்துணைக் குறைந்த வலிமையுடைய நாம் எந்த முயற்சியைத்தான் எடுத்து நிறைவேற்றமாட்டுவோம்? இங்ஙனம் நாம் சிற்றறிவுஞ் சிறுகிய ஆற்றலும் உடையேமாய் இருத்தலினாலன்றோ, நாம் எடுக்கும் எத்தகைய சிறுமுயற்சிக்கும் பிறருதவியை நாடவேண்டியவர்களா யிருக்கின்றோம். மனைவி கணவனுதவியையுங், கணவன் மனைவியுதவியையும், மக்கள் பெற்றோருதவியையுங், குடிகள் அரசனுதவியையும், அறிவிலார் அறிவுடையாருதவியையும், மாணாக்கன் ஆசிரியனுதவியையுந், தொழிலாளி தலைவனுதவியையும் இன்றியமையாது வேண்டிநிற்க, உலகியலொழுக்கம் நடைபெறுவதனை உற்றுநோக்குங்கால் ஒருவன் தானாகவே ஒரு முயற்சியைத் தனிமுடிக்க மாட்டுவானென்பது பெரிதும் பிழைபடுவதொன்றாம்.

அற்றேல், மக்களாயினார் ஒருவர் ஒருவர்க்கு உதவியாய் நின்றே தாம் எண்ணிய முயற்சிகளை இனிதுமுடிக்கக் காண்ட

வின், இதுவே அமையும்; இதனின் வேறாகக் கடவுளை வணங்குதலும் வழிபடுதலும் எற்றுக்கு? என்றால், மக்கள் ஒவ்வொருவருஞ் சிற்றறிவுஞ் சிறுகிய ஆற்றலும் உடையராயிருத்தலால், இவர்தாமே ஒருவர்க்கொருவர் உதவியாய் நின்று, தாம் எண்ணிய முயற்சியை முடித்துவிடக்கூடும் என நினைப்பது பெரும்பிசகு. நமக்குத் துணையாய், உதவியாய் நிற்பரென நம்மால் நம்பப்பட்டவர்கள், நோய்கொண்டமையாலோ நம்மொடு மாறுபட்டமையாலோ, அல்லது நமக்குமுன் இறந்துபடுதலாலோ, அல்லது பிறர் வயப்படுதலாலோ, நமக்கு உதவியுந் துணையுமாகாமல் நமது முயற்சியினைப் பாழ்படுத்துதலுங் கண்கூடாய்க் காண்டுமல்லமோ? மேலுஞ், சடுதியிலிறத்தலுஞ் சடுதியில் நோய்வாய்ப்படுதலும், பிறத்தலும் ஆகிய நிகழ்ச்சிகள் தம் அறிவாற்றலை முற்றும் கடந்து நிகழ்தல் எல்லாராலுந் தெளியப்பட்டுக் கிடத்தலின், நம்மவர் தாமே தம்முள் ஒருவர்க்கொருவர் உதவியாய் நின்று தாம் எடுத்த முயற்சிகளை நன்கு முடிக்கமாட்டுவாரென்பதும் போலிப் பொய்யுரையேயாம். எனவே, சிற்றுயிர்களாகிய நமக்குள்ள அறியாமையும், மறதி சினம் காமம் பகை முதலிய இழிகுணங்களும், இளைப்புக் களைப்புகளும் இல்லாத, முற்றறிவும் முழுமுதலாற்றலும் ஒருங்குடைய, ஒரு பெருந் தனித்தலைமைக்கடவுளின் உதவி ஒன்றுமட்டுமே நமக்கு எக்காலத்தும் எந்நேரத்தும் எவ்விடத்தும் மாறாத பேருதவியாய் நிற்பதென்பதும், அக்கடவுளின் துணை ஒன்றுமே எஞ்ஞான்றும் மாறாத பெருந்துணையாய் நிற்பதென்பதும் நாம் தெளிதல்வேண்டும். அத்துணைப் பேருதவியும் அத்துணைப் பெருந்துணையுமாய் நிற்கும் முழுமுதற் கடவுள், ஒரு நொடிப்பொழுதும் எம்மை விட்டகலானாய், எமக்கு உள்ளும் புறம்புமாய் நிற்கின்றான் என்னும் பெரு நம்பிக்கையும் பேருறுதியும் வந்தாலல்லாமல், எவனும் எந்த முயற்சியையும் அயர்வின்றி எடுத்து முடிக்கமாட்டுவானல்லன். ஆதலால், எத்தகைய முயற்சிக்கும், எத்தகைய நல்லெண்ணத்துக்கும், எத்தகைய நல்லறிவு நிகழ்ச்சிக்கும், அடிப்படையாய் நிற்கற்பாலது பேரறிவும் பேராற்றலும் உடைய ஒரு முழுமுதற் கடவுளைப்பற்றிய நன்னம்பிக்கையேயாம். அந்நன்னம்பிக்கையுடையார்க்கு, அவரதுள்ளம் மேன்மேல் அறிவாலும் முயற்சியாலுங் கிளர்ந்தெழுமாதலின், அவர்



முயற்சிக்குத் தடைசெய்யத் தகுவது ஏதுமேஇன்றாம். சமணர்கள் இழைத்த கொடுந் தீங்குகட்கெல்லாஞ் சிறிதும் அஞ்சாது நின்று அவற்றைப் புறங்கண்ட அப்பர் சம்பந்தர் வரலாறுகளும், ஏனைச் சமய குரவர்கள் வரலாறுகளும், எஞ்ஞான்றும் அரும் பெருமுயற்சிகளை முடிக்கும் ஏனை அறிஞரின் வரலாறுகளும் யாங் கூறும் உண்மையினை நிலைநிறுத்துதற்குப் போதிய சான்றுகளாம். ஆகவே எத்தகைய முயற்சியைச் செய்தாலும் முழுமுதற்கடவுள் உணர்ச்சியோடு அதனைச்செய்தலே, அதனை நிறைவேற்றிப் புகழ் புண்ணியங்களைப் பெறுதற்கு ஏதுவாம் என்று தெளிக.

இனி, மக்கள் முதலிய சிற்றுயிர்களுக்குப் பிறவிவருவதன் நோக்கம் இன்னதென்றாராய்ந்து அதற்கேற்ப நம்முடைய முயற்சிகளைச் செய்தால்மட்டும் நாம் சிறந்த பயனை அடையலாம். பிறவி எடுக்கும் உயிர்கள் தம்முடைய முயற்சியினாலேயே இப் பிறவிகளை அமைத்துக்கொள்கின்றார்கள் என்று எவருமே சொல்லத் துணியார். தம்முடைய முயற்சியினாலேயே இப் பிறவிகளை அமைத்துக்கொள்ளும் ஆற்றல் மக்கட்கிருந்தால் தமது விருப்பத்துக்கு மாறாகத் தாம் ஏன் இறந்துபோகின்றார்கள்? இறந்துபோவதில் எவர்க்கும் விருப்பம் இல்லாமையோடு இப்பிறவியைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டுமென்னும் பேரவாவும் பெருமுயற்சியும் எல்லாரிடத்துங் காணப்படுகின்றனவல்லவோ? அப்படியிருந்தும், எல்லாரும் ஏன் இறந்துபோகின்றனர்? மக்கள் எண்ணத்துக்கு மாறாக நிகழும் இந் நிகழ்ச்சியை உற்றுநோக்குங்காற், பிறவியை வருவிப்பதும், அதனினின்றும் உயிர்களை விடுவிப்பதும் ஆகிய அரும்பெருஞ்செயல்கள் இச்சிற்றுயிர்களின் அறிவாற்றலுக்கு அடங்காமல், அவற்றைக் கடந்து நிற்கும் முழுமுதற்கடவுளின் பேரறிவு பேராற்றல்களின் வழி நடைபெறுகின்றன வென்பது நன்கு புலப்படவில்லையா? ஆகவே, பிறவிகளைத் தரும் முதல்வன் அப் பிறவிகளை உயிர்களுக்கு நிலையாக வையாமல், அடுத்தடுத்து அவற்றை மாற்றிக்கொண்டு செல்வதன் நோக்கம்: இப்பிறவியே பெரும் பயன் அளிப்பதன்று; இனி அடையப்போகும் பெரும் பயனுக்கு இப்பிறவி ஒரு பெருங்கருவியேயாம் என்பதன்றோ? ஆகவே, இனி அடையப்போகும் பெரும்பயனுக்கு ஏற்றபடி, இப் பிறவியின் முயற்சிகளை ஒழுங்கு செய்தல்வேண்டுமே யல்லாமல்,

இதனையே நிலையாக நினைத்துச் செய்வனவெல்லாம் பழுதாய்ப் போகும். ஆதலாற், கடவுளின் திருவுளக்கருத்தையும், சிற்றுயிர்களாகிய நம்முடைய நிலையையும் ஆராய்ந்து இப்பிறவியைப் புனிதமாக்கிக்கொண்டு, இதிற் செம்மையாக நீண்டவாழ்க்கை செலுத்துவதொடு மறுமை வாழ்க்கைக்கு வேண்டுந் தவமுயற்சிகளையுந் தவஇயல்களையும் விடாப்பிடியாய்க் கைக்கொண்டு நாம் ஒழுகல்வேண்டும். இவ்வுயர்ந்த உண்மைகளைத் தகுதிவாய்ந்தாரெல்லார்க்கும் அறிவிக்கும் **முதற்பெருநோக்கங்** கொண்டே ஆசிரியர் மறைமலையடிகளால் இப் பொதுநிலைக்கழகம் நிலைபெறுத்தப் படுவதாயிற்று.

## அன்பு அருள் ஒழுக்கம்

எல்லாம்வல்ல இறைவன் அறிவும் அன்பும் அருளுமே உருவாய்க்கொண்டு விளங்குகின்றானென்பது, அவன் அமைத்த அமைப்புகளில் நன்கு புலனாதலால், மக்களாகிய நாமும் அவனைப் போற் பேரறிவும் பேரன்பும் பேரருளும் உடையராகி, அவனது பேரின்ப நிலையை அடையும் வரையில் நமக்குப் பலபிறவிகள் வருமென்பது திண்ணமாய்த் தெரிகின்றது. அப் பிறவிகளைக் குறைத்து இறைவனுடைய பேரின்ப நிலையை நாம் விரைவிற் பெறல்வேண்டுமானால், நாம் நம் அறிவையும் அன்பையும் அருளையும் அளவின்றிப் பெருகச் செய்தல்வேண்டும். எல்லையில்லாத அன்புடைய இறைவனை இடைவிடாது நம் நினைவில் வைத்தால் மட்டுமே, நாமும் நமதுநலனை மறந்து எல்லா உயிர்களிடத்தும் எல்லையில்லாத அன்பும் அருளும் உடையராக நடத்தல்கூடும். இவ்வாற்றாற் கடவுளிடத்துப் பேரன்புபூண்டு ஒழுகுவதும், எல்லா உயிர்களிடத்தும் அன்பினால் அகங்கரைந்து ஒழுகுவதும் ஒன்றைவிட்டொன்று பிரியாத அத்துணை ஒருமைப்பாடுடையவாகும். மக்களினுந் தாழ்ந்த சிற்றுயிர்களிடத்து இரக்கம்பூண்டு ஒழுகுதலாலும், நம்போன்ற மக்களிடத்து ஏதொரு வேற்றுமையுங்காணாது அவர்பால் அன்பும்அருளும் வைத்து, அவர்க்குஆவன செய்து, அவரை அறிவிலும் அன்பிலும் மேலேற்றுதலாலுமே நமக்கு அன்புமருளும் அளவுபடாது பெருகும். உயிர்களிடத்து



இரக்கங் காட்டுதலென்பது உயிர்களைக் கொல்லாமையும், அவற்றின் ஊனை உண்ணாமையும் ஆகும். உயிர்களைக் கொல்வோரும் அவற்றின் ஊனை உண்போருங் கொடிய வன்னெஞ்சமுடையராதலால் அவர்க்கு அன்பும் அருளும் உண்டாகா.

"தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"

என்று **தெய்வத் திருவள்ளுவர்** கூறுதலும்,

"உயிர்க்கொலையும் புலைப்புசிப்பு முடையவர்க ளெல்லாம்
உறவினத்தா ரல்லர் அவர் புறவினத்தார்"

என்று **இராமலிங்க அடிகள்** அருளிச்செய்தலுங் காண்க. அங்ஙனமே நம்போன்ற மக்களிடத்துச் சாதிவேற்றுமை சமயவேற்றுமை பாராட்டி, அவர்பால் அருவருப்புக்கொள்வார்க்கு அன்பு அருள்கள் உண்டாதல் சிறிது மில்லையாதலால், அவரும் பொதுநிலைக் கழகமாகிய சமரச சன்மார்க்கத்துக்குப் புறம்பாகுவர்.

"சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி" என்றும்,

"சமயவாதிகள் தத்த மதங்களில்
அமைவ தாக அரற்றி மலைந்தனர்" என்றும்,

"புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயந்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்க" என்றும்

**மாணிக்கவாசகப் பெருமானும்**, அவ்வரை யொப்பவே,

"சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே"

என்று **இராமலிங்க அடிகளும்** மெய்யறிவு கூறியிருத்தல் நினைவிற் பதிக்கற்பாலதாகும். இவ்வாறு சிற்றுயிர்கள்பாற் கொலைபுலைதவிர்ந்த இரக்கவொழுக்கமும், நம்போன்ற மக்கள்பாற் சாதிவேற்றுமை சமயவேற்றுமை தவிர்ந்த அன்பொழுக்கமும் உடையாரே, உண்மை அருள் உடையராய், இறைவனருளை முற்றும் பெறுதற்குரியராதலின், அவரெல்லாஞ் சமரச சன்மார்க்க சங்கத்தாராவரென்றும், அவர்மட்டுமே ஓர் உயர்குலத்தவராவரென்றும் நன்கு விளக்கி,

"அருளுடையா ரெல்லாருஞ் சமரச சன்மார்க்கம்
அடைந்தவரே யாதலினால் அவருடனே கூடித்
தெருளுடைய அருள்நெறியிற் களித்து விளையாடிச்
செழித்திடுக வாழ்கவெனச் செப்பிய சற்குருவே"

என்றும்,

"கொலைபுரிவார் தவிர மற்றையெல்லாரும் நினது
குலத்தாரே நீயெனது குலத்து முதல்மகனே
மலைவுறவே சுத்தசிவ சமரச சன்மார்க்கம்
வளர வளர்ந்திருக்கவென வாழ்த்தியவென் குருவே"

என்றும்,

"சாதிகுலம் சமயமெலாந் தவிர்த்தெனைமே லேற்றித்
தனித்ததிரு அமுதளித்த தனித்தலைமைப் பொருளே"

என்றும் **இராமலிங்க அடிகளார்** அருளிச்செய்திருத்தல்காண்க. ஆதலால், இப்பொதுநிலைக் கழகத்தின் **இரண்டாம் பெருநோக்கம்** கொலை, புலை, சாதிவேற்றுமை, சமயவேற்றுமைதவிர்ந்த அருளொழுக்கத்தை யாண்டும் பரப்புதலும், அங்ஙனம் பரப்புதற்கு உதவியாகத் தகுதி வாய்ந்த மாணவரைப் பழக்கி அவரை அந்நிலையில் நிறுத்துதலுமாகும்.

## தமிழ்ப் பயிற்சியின் முதன்மை

இனி, மேலே காட்டிய பொதுநிலைக்கழகக் கோட்பாடுகளை எளிதிலே எங்கும் பரவச் செய்தற்குத் தமிழ்மொழிப் பயிற்சியே முதற்பெருங் கருவியாக எடுக்கப்படும். ஏனென்றால், மிகப் பழைய நாகரிக மொழிகளிற் பண்டைக்காலந்தொட்டு இன்றைக் காலம் வரையில் உயிரோடு உலவி மக்களுக்குப் பெரிதும் பயன் பட்டுவருவது தமிழ்மொழி ஒன்றுமேயாகும். பண்டை நாகரிக மொழிகளிற் சிறந்த ஆரியம், கிரேக்கம், இலத்தீன், ஈபுரு முதலான மொழிகளெல்லாம் எத்தனையோ ஆயிர ஆண்டுகளுக்கு முன்னமே மக்களால் வழங்கப்படாமல் இறந்தொழியவுந், தமிழ் மொழி ஒன்றுமட்டுமே அன்றுதொட்டு இன்றுவரையில் இளமை குன்றாது வளமையிற்றிகழ்வதை உணர்ந்து பார்க்குங்கால், இது தெய்வத்தன்மை வாய்ந்த மொழி என்பது நன்கு புலனாகின்றதன்றோ? தமிழுக்கு இதனினும் மிக்க சிறப்பு வேறியாது வேண்



டும்? மேலும், இறந்துபட்ட ஆரியமொழிகளிற் பொய்யும் புளுகும் மலிந்த புராணகதைகளும்; கடவுளின் முழுமுதற்றன்மையைக் குறைத்துக், குறைபாடுடைய மக்கள் சிலரைக் கடவுள்நிலைக்கு உயர்த்தி, மக்கள் அவ்வாற்றால் முழுமுதற் கடவுளைச் சாராது பிறவிக்கடலிற் கிடந்து உழலச்செய்யும் பொருந்தாப் பொய்க்கதைகளும்; ஒரு பிறப்பினரான மக்களில் ஒரு சிறுபாலாரை உயர்த்தி மற்றைப் பெரும்பாலாரைத் தாழ்த்தி அப்பெரும்பாலார்க்குப் பெருந்தீங்கு பயக்குங் கொடிய முறைகளை வகுத்த மிருதிநூல்களும்; வாயற்ற ஏழைஉயிர்களைக் கணக்கின்றிக்கொலை புரிந்துங் கட்குடித்துஞ் சிறுதெய்வ வெறியாட்டெடுப்பிக்கும் வேள்விநூல்களும்; அச் சிறு தெய்வங்களுள் ஒன்றினொன்றை உயர்த்தி அவைதம்மை வணங்குவார்க்குட் பெருங் கலகத்தை மூட்டுஞ் சமயவேற்றுமைப் புராணங்களும் நிறைந்திருத்தல் போலாது, இயற்கைத் தோற்ற அழகுகளையும், மக்களின் அன்பொழுக்க அருளொழுக்க விழுப்பங்களையும், உலகியல் நுட்பங்களையும், ஒரு தெய்வ வழிபாட்டில் உள்ளத்தை ஈடுபடுத்தி உருக்குந் தெள்ளமிழ்தப் பாக்களையுங், கடவுள்நிலை உயிர்நிலை உயிரைப்பொதிந்த மலநிலை என்னுமிவற்றை ஆழ்ந்து ஆழ்ந்து அறிவு நுணுகி ஆராயும் ஆராய்ச்சிப் பெருநூல்களையும் உடைய தமிழ் மொழி தெய்வத்தன்மையுடைய தென்பதிற் சிறிதும் ஐயமில்லை யன்றோ? மேலும், உலகிற்கெல்லாம் ஒருதானேயாய் விளங்காநின்ற முழுமுதல்வனை நேரே காணும் பேறுவாய்ந்த **மாணிக்கர், சம்பந்தர்** முதலான அருட்குரவர்களெல்லாரும் இதன் தெய்வத்தன்மை உணர்ந்தன்றோ, இறைவனை வழுத்துதற்கும் வாழ்த்துதற்கும் இத் தமிழ்மொழியையே எடுத்து வழங்குவாராயினர்? இதுவேயுமன்றி, மற்றைமொழிகளெல்லாஞ் சினம் வருத்தந் துன்பம் வந்தாற் பிறக்கும் உரத்த ஓசைகளுங் குறிப்போசைகளும் நிறைந்திருத்தல்போலாது, மகிழ்ச்சிமிகுந்த அமைதிக்காலத்திற் பிறக்கும் இனிய மெல்லோசைகளே செந்தமிழ்மொழியில் நிரம்பியிருத்தலால், அன்பினால் அகங்குழைந்துருகி அளவளாவுவார் தம் இம்மையின்ப வாழ்க்கைக்கும், இறைவனை அன்பினாற் குழைந்து குழைந்துருகித் தொழுது பாடுவார் தம் மறுமையின்ப வாழ்க்கைக்குந் தமிழ்மொழி யொன்றுமே இசைந்த நன் கருவி

யாகும்; இவ்வுண்மை கண்டன்றோ **ஆசிரியர் இராமலிங்க வள்ளலார்,**

> "இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் போதுபோக்கையும் உண்டுபண்ணுகின்ற **ஆரிய** முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசு உடையதாய்ப், பாடுதற்குந் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய்ச், சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி ஒன்றனிடத்தே மனம் பற்றச்செய்து, அத்தென்மொழிகளாற் பலவகைத் தோத்திரப் பாட்டுக்களைப் பாடுவித்தருளினீர்!"

என்று இறைவனை நோக்கி விண்ணப்பித் தருளினார். ஆகவே இப் பொதுநிலைக்கழகத்தின் **மூன்றும் பெருநோக்கம்** தனித் தமிழ்மொழிப் பயிற்சியையுந், தனித்தமிழ் நூற்பயிற்சியையும் எங்கும் பரவச்செய்தலும் மாணுக்கர்க்குப் பயிற்றுதலுமாகும். இந் நோக்கத்தை யடுத்து இக்கால நாகரிக உணர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படும் ஆங்கிலமொழிநூற் பயிற்சியையும் ஆரியமொழிநூற் பயிற்சியையும் உடன்சேர்த்துப் பயிற்றுதலும் இக்கழக முயற்சிக்கு உரியதாகும்.

## சென்ற காலத்திற் கழக ஆசிரியர் ஆற்றியதொண்டு

இனி, ஆசிரியர் மறைமலையடிகள் பொதுநிலைக்கழகம் நிலை பெறுத்துதற்கு முன்னமே 'சைவசித்தாந்த மகா சமாஜ' மெனப் பெயரிய பெருங் கழகமொன்றனை 1905-ம் ஆண்டு தோற்றுவித்து அதனை மிகவுந் திறம்பட நடாத்திவந்தார்கள். என்றாலும், சைவ சித்தாந்தத்தின் மெய்ந்நிலையுணராத குறுகிய நோக்கமுடைய சைவர்கள், சைவத்தின் சிறந்த உண்மைகளைப் புராணப் பொய்க் கதைகளோடு கலப்பித்துச் சாதிவேற்றுமை சமயவேற்றுமைகளை மிகுதிப்படுத்துதற்கு இடமாய் அவை தம்மைத் திரிபுபடுத்த முனைந்ததோடு, ஆசிரியரின் விரிந்தநோக்கத்துக்கு மாறாகச் சமாஜத்தையும் வேறுபடுத்தப் புகுந்தமையால், அடிகள் அதனொடு கொண்ட தமது தொடர்பை அறுத்துத், தமது விரிந்த நோக்கத்திற்கு இசையப் 'பொதுநிலைக் கழகம்' என்பதனை நிறுவி, ஆசிரி



யர் மாணுக்கர் முறையில்வைத்துச் சைவசித்தாந்தப் பொதுநிலை (சமரச) உண்மைகளை எங்கும் பரவச் செய்வாராயினர்.

இவ்இரண்டு கழகங்களுந் துவங்குதற்குமுன்னமே 1902-ம் ஆண்டில் **ஞானசாகரம்** எனப் பெயரிய செந்தமிழ் வெளியீட்டைத் துவங்கிச், சைவசித்தாந்த மகா சமாஜம் நிறுவிய காலையில் அதனைச் சமாஜ வெளியீடாகவும், அச்சமாஜத் தொடர்புவிட்டுப் பொதுநிலைக் கழகந் துவங்கிய காலையில் அதனைக் கழகவெளியீடாகவும் நடத்தி வருவாராயினர். இவ் வெளியீட்டின் வாயிலாகச் செந்தமிழ் நலங்கனிந்த அரிய பெரிய தமிழ்நூல்களும், உயர்ந்த சைவசித்தாந்த உண்மைகள் பொதிந்த அறிவுப்பெருநூல்களும் அடிகளால் இதுகாறும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஞானசாகரந் துவங்குதற்கு முன்னமே, அடிகள் தமது பதினாறமாண்டில் நாகபட்டினத்தில் முதன்முதல் நிலைபெறுத்திய **இந்துமதாபிமான சங்கத்தில்** விரிவுரைகள் நிகழ்த்தத்தொடங்கியது முதல் இதுகாறும் இவ்விந்திய நாட்டிலும் இலங்கையிலும் அவர்கள் நிகழ்த்திய விரிவுரைகள் **ஆயிரக் கணக்காகும்.** சமயத் துறையிலுந் தமிழ்மொழித்துறையிலும் மக்கள்முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பிறதுறைகள் பலவற்றிலும் இவர்கள் இதுகாறும் எடுத்துப்பேசியிருக்கும் அரும்பெரும் பொருள்கள் அளவில்லாதனவாகும். இவர்களின் விரிவுரைகளைக்கேட்டு அறிவு விளங்கப்பெற்றார் தொகையும் அளவிடப்படாததாகும். இவர்கள் சென்ற முப்பத்தெட்டு ஆண்டுகளாக நாள்வெளியீடுகள், கிழமை வெளியீடுகள், திங்கள் வெளியீடுகளில் வரைந்திருக்குங் கட்டுரைகளாலுந், தாம் பெரிதாராய்ந்து இதுகாறும் வெளிப்படுத்தியிருக்கும் முப்பத்திரண்டு அரியபெரிய நூல்களாலும் நல்லறிவு பெற்று நம்நாட்டவர் பலதுறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வருதல் எவரும் அறிந்ததேயாம்.

## அம்பலவாணர் திருக்கோயில்

இனி, முழுமுதற் கடவுள் நிலையை மனத்தளவாய்வைத்து ஆராய்தலாலுஞ், சொல்லளவாய் வைத்துப் பேசுதலாலுமே மக்கள் அக்கடவுளின் பேரின்பப்பேற்றை அடைதல் இயலாது. இவ்வுடம்பையும் இவ்வுடம்பிலுள்ள கண் கால் கை முதலான உறுப்பு

களையும் படைத்துக்கொடுத்த முதல்வனுக்கு, அவ்வுடம்பையும் அவ்வுறுப்புகளையும் பயன்படுத்தி, நெஞ்சம் நெக்குநெக் குருகுதலால் மட்டுமே அவன் திருவருட்பேற்றிற்கு உரியராகலாம்.

அற்றேற், காணவுங் கருதவும்படாத இறைவனுக்கு நம் முடம்பைப் பயன்படுத்துதல் யாங்ஙனங் கூடுமெனிற்; சிற்றறிவுஞ் சிறுதொழிலு முடைய மக்களாகிய நம்மனோரின் மனம் ஓர் உருவத்தையேபற்றிநிற்குமல்லது அருவத்தைப் பற்றிநிற்கவல்லதன்று. வடிவம் இல்லாத வெறும்வெளியை எவராவது நினைவில்வைக்கக் கூடுமா? நம் நினைவுகள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்ப்போமானால் ஒவ்வொரு நினைவும் ஒவ்வொரு வடிவத்தையே பற்றிக் கொண்டு நிற்கக் காணலாம். இவ்வாறு வடிவங்களைப்பற்றிய நம்முடைய நினைவின் தொகுதிகளே நமக்கு அறிவாயும் அறிவு வளர்ச்சியாயும் அமைகின்றன. ஏதொருவடிவத்தையும் அறியவும் நினைக்கவும் மாட்டாத சிறிய கைக் குழந்தைக்கு அறிவு சிறிதுமில்லாமை எவரும் அறிந்ததன்றோ? ஆதலாற், காணவுங் கருதவும்படாத இறைவனை நாம் காணவுங் கருதவுந் தக்க நிலையில் வைத்து வழிபட்டு வந்தாலன்றி, அவனை அறிவதும் அவனை நினைப்பதும், அவன்பால் அன்புபூண்டு ஒழுகுவதும் நம்மனோர்க்குச் சிறிதும் இயலா. ஆகவே, எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளை நம்போன்ற ஓர் அழகிய வடிவத்தில் வைத்து வழிபடுதலே சிறந்த முறையாகும். என்றாலும், அங்ஙனம் நாம் கடவுளின் திரு அடையாளமாக அமைக்கும் வடிவம், அக் கடவுள் இலக்கணத்தை உணர்த்துவதாய் அக்கடவுள் நிலைக்கு மாறுபடாததாய் இருக்கவேண்டும். கடவுளிலக்கணத்தை உணர்த்தாதனவுங் கடவுள்நிலைக்கு மாறானவும் ஆகிய வடிவங்களை வைத்து வழிபட்டால் அவ்வழிபாடு கடவுளைச் சார்ந்ததாகாது. ஆனதனாற்றான், பண்டைக்காலத்திருந்த நம் ஆசிரியர் முதற் பின்றைக்காலத்து வந்த இராமலிங்க அடிகள் ஈறாகிய எல்லாரும், முழுமுதற் கடவுள் எல்லா உயிர்களினகத்தும் எல்லாப் பொருள்களினகத்தும் அவற்றின் புறத்தும் நிறைந்திருந்து இடையறாது ஆடி, அவற்றையெல்லாம் ஆட்டும் இன்பக்கூத்தை நாம் நினைவுகூர்தற்பொருட்டு, அவன் ஆடும்நிலையில் ஒரு திருவுருவத்தை அமைத்து அதனை வழிபட்டு வருவாராயினர். அவ்வழிபாடு இறைவன் அடையா



ளத்திலே செய்யப்படினும், அஃது உயிர்களை மேலேற்றும் பொருட்டு இறைவன் இயற்றும் இன்ப அருட்கூத்தின் இயல்பைப் புலப்படுத்தி நம் அறிவையும் அன்பையும் அவன்பாற் பதியவைத்தலின், அதுவே முழுமுதற் கடவுளை வழிபடுஞ் சிறந்த முறையாகும். அம்முறையைப் பின்பற்றியே எல்லாச் சாதியாரும், எல்லாச் சமயத்தாரும் ஏதொரு வேற்றுமையுமின்றி வழிபட்டு உய்யும்பொருட்டு அம்பலவாணர் திருவுருவம் வைத்த கோயிலொன்று அடிகளால் அமைக்கப்படலாயிற்று.

## மணிமொழி நூல்நிலையம்

இனிக், கடவுள்நிலையை யுணர்ந்து அவன் றிருவருளைப் பெறுதற்கும்; அவனாற் படைக்கப்பட்டிருக்கும் உலகத்தினியல்பையும், இவ்வுலகத்தில் இருக்கும் பலவகைப் பொருள்களினியல்பையும், இவ்வுலகத்திருந்து இங்குள்ள பொருள்களைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிந்து சிலகாலிருந்து சிலகாலில் மறைந்துபோகும் உயிர்களாகிய நம்மியல்பையும், நம்மிற் பொதிந்திருக்கின்ற மும்மலங்களினியல்பையும், இம் மலங்களினின்றும் விடுபட்டு நாமடைதற்குரிய பேரின்ப வீட்டினியல்பையும் நாம் நன்குணர்ந்து நம்மறிவை வளர்த்து இன்பத்தைப்பெறுதற்கும் இவ் வியல்புகளையெல்லாம் நமக்கு நன்கு அறிவுறுத்தும் அறிவுடையோர் நூல்களினுதவி நமக்கு இன்றியமையாது வேண்டப்படுவதா யிருக்கின்றது. நூல்களைக் கல்லாதவ ரறிவு எவ்வளவு சிறந்ததாகக் காணப்படினும், அவர்சொல் கேட்கற்பாலதன்று, அவரைக் காண்டலும் ஆகாது என்பதனை **ஆசிரியர் திருமூலர்**,

"கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராங்
கல்லாத மூடர் கருத்தறியாரே" என்று கூறுமாற்றால்

அறிந்துகொள்ளலாம். இங்ஙனமே, நம் சைவசமயாசிரியர்களில் **திருஞானசம்பந்தப் பெருமான்**,

"கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" எனவுந், **திருநாவுக்கரசு நாயனார்**,

"கல்லாதார் மனத்தணுகாக் கடவுள்தன்னைக்
கற்றார்கள் உற்றோருங் காதலானை" என்வுங் கூறுதல் காண்க.

ஆதலினாற்றான், கடவுளை வணங்குந் திருக்கோயில்களி லெல்லாம் பல்வகைக் கலை நூல்களையும் ஆராய்ந்துணரும் பட்டி மண்டபங்கள் பண்டைக் காலத்தில் வகுக்கப்பட்டிருந்தன. கல்வியறிவு பெரிதுங் குன்றிப்போன பின்றைக்காலத்திலோ அப் பட்டிமண்டபங்களெல்லாம் ஐயகோ! பாழ் மண்டபங்களாய்க் கிடக்கின்றனவே! கடவுளை வழிபடு மிடத்தில் நூலாராய்ச்சியுஞ்; நூலாராய்ச்சி செய்யுமிடத்திற் கடவுள் வழிபாடும் ஒன்றைவிட் டொன்று பிரியாமலே நடைபெறும்படி மெய்யுணர்வினரான நந் தொல்லாசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தும், அச்சிறந்த ஏற்பாடு பின்னாளிற் சிதைந்துபோயிருப்பதைக் காணுங்கால் அறிவுடை யார் நெஞ்சம் நீராய் உருகுகின்றதே! இவ்விரங்கத்தக்க நிலை யைக் கண்டே, ஆசிரியர் மறைமலையடிகள் முன்னையோர் கொண்ட முறைப்படி பின்னையோருஞ்செய்து நலம்பெறுதற்காக அம்பலவாணர் திருக்கோயிலுடன் மணிமொழி நூல்நிலையமுஞ் சேர்த்துப் பொதுநிலைக் கழகநிலையத்தில் அமைத்திருக்கின்றார்கள். மணிமொழி நூல்நிலையத்தில் இதுகாறுந் தொகுத்துவைக்கப்பட் டிருக்குந் தமிழ் ஆரிய ஆங்கில நூல்களின்தொகை இரண்டா யிரத்து எழுநூற்று எழுபத்தாறு (2776).

# பொதுநிலைக் கழக

# இருபதாம் ஆண்டு நிறைவுவிழா

முன்னே காட்டியபடி, நம் செந்தமிழ்த் தெய்வத் தொல்லாசிரியர் முதல் இராமலிங்க அடிகள் ஈறாக வந்த சான்றோர்க ளெல்லாம் ஒருமுகமாய் நின்று, சாதி வேற்றுமை சமய வேற்றுமைகளை ஒழித்து, மக்களெல் லாரும் அன்பும் அருளும் உடைய ஒரே குலத்தவராய், ஒரு முழுமுதற் கடவுளாம் உண்மைத்தந்தையை வணங்கி இம்மை மறுமை நலங்களைப் பெறல்வேண்டும் என்று வற்புறுத்தி வகுத்தகோட்பாடுகளை, அவர்வகுத் தபடியே நம் தமிழ்மக்கள் உள்ளத்திற் பதியவைக்க விரும்பியே ஆசிரியர் அடிகளாற் பொதுநிலைக் கழக இருபதாம் ஆண்டு நிறைவுவிழாக் கொண் டாடப்படலாயிற்று.

உயர்ந்த நோக்கங்களுடைய மக்களையுஞ் செல்வர்களையுந் தமிழ் ஆங் கிலங்கற்ற அறிஞர்களையுந் துறவிகளையும் ஒருங்கு கூட்டவேண்டுமென் னும் எண்ணத்தால், விழாவுக்கு நாலரைத்திங்கள் முற்றொட்டே அதாவது ஆவணி உஅ (12-9-1930) முதலே கழக அறிக்கைகளும் விளம்பரங் களும் அழைப்புக்கடிதங்களுந் தமிழ் வழங்கும் உள்நாடு வெளிநாடுகள் எங்கணும் பரப்பப்பட்டு வந்தன; செல்வர்கட்குஞ் சைவ மடாதிபதிகட் கும், பொருளுதவிவேண்டி எழுதியகடிதங்கள் அடிகளால் நேரே அனுப் பப்பட்டன.

தக்கபடி பொருளுதவி செய்தோர் தொகை மிகக்குறைவு. செல் வர்களிற் பலர், எழுதின கடிதங்களுக்கு விடைகூட எழுதாமல் இருந்து விட்டனர்; சிலர் தமது செல்வத்தின் மிகுதிக்கும், அடிகள் மேற்கொண்ட அரும்பெரு முயற்சியின் தகுதிக்குந் தக்கபடி கொடாமற் சிறுதொகை கள் கொடுக்க வந்தமையின், அத்தொகைகள் வாங்காமல் மறுக்கப்பட் டன. நிலையில்லாத ஆரவாரமான வழிகளிற் பதினாயிரக்கணக்கான பொருளைச் செலவிட்டுப் பழிபாவங்களைத் தேடும் நம்நாட்டுச்செல்வர்கள், நம்நாட்டவர் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத தமிழ்மொழி வளர்ச்சி யையுஞ் சமய வளர்ச்சியையுங் கருதி அடிகள் மேற்கொண்டிருக்கும் இந் நன்முயற்சிக்குத்தக்கபடி உதவிசெய்திருப்பார்களாயின், அடிகள் இந்நாக ரிக கால உணர்ச்சிக்குப் பொருந்தியவகையில் இனிய செந்தமிழ் உரை நடையில் எழுதிவரும் புதிய புதிய தமிழ் நூல்கள் ஆங்கில நூல்களை விரைந்து வெளியிடவுந், தனித்தமிழ்க்கல்லூரிஒன்று திறப்பித்து மாணாக் கர்க்குச் சம்பளம் இன்றி உணவுகொடுத்துத் தமிழ் ஆங்கிலம் வடமொழி கற்பிக்கவும், விரிவுரை செய்யவருந் தமிழறிஞர்க்கு அவர் நிலைக்கு ஏற்ற

படி தக்க நன்கொடை அளிக்கவும், புதுமுறையில் அரிய தமிழ் நூல்கள் இயற்றும் புலவர்க்குப் பொருளுதவி செய்யவும் பயன்பட்டு, அவ்வுதவி அவர்கட்கு அழியாப் புகழ் புண்ணியங்களைப் பயந்திருக்கும். ஐயகோ! அவர்களது பொருள் இந்நல்வழிக்குப் பயன்படலாகாதா!

என்றாலும், அடிகள் முப்பத்தெட் டாண்டுகளாகத் தமிழுக்குஞ் சைவசமய விளக்கத்திற்குஞ் சிறிதும் அயர்வின்றித் தொடர்பாகச் செய்துவருந் திருத்தொண்டின் உயர்வும், அவர்களது பேர் ஆராய்ச்சியறிவின் தனிப்பெரு மாட்சியும் நன்குணர்ந்து, இத்தக்க நேரத்தில் உதவிசெய்த பெரியார் சிலரின் சிறந்த உதவிகள் இங்கே குறிப்பிடற்பாலன.

### திருவாவடுதுறை யாதீன பண்டாரசந்நிதிகளான ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிக சுவாமிகள் செய்தபேருதவி

பொதுநிலைக் கழக நிலையத்து அம்பலவாணர் திருக்கோயிலுக்குத் திருக்குடமுழுக்குச் செய்யும் நாளில் அம்மையப்பர்க்கு அணிவித்தற்கு இரண்டு காசிப்பட்டாடைகளும், பொதுநிலைக் கழக விழாப்பேரவையில் அடிகள் தலைமை பூணுங்கால் அவர்கட்கு அணிவித்தற்கு முந்நூறுரூபா பெறுமான முழுத் தங்கப்பட்டாடை ஒன்றும், அடிகள் உடுத்துக்கொள்ளுதற்குப் பொற்சரிகை பின்னிய காவியாடைகள் இரண்டும் விடுத்தருளியதொடு, நன்கொடையாக ரூபா நூறும் உதவிசெய்தருளினார்கள். பண்டாரசந்நிதிகள் இங்ஙனந் தக்கநேரத்தில் அடிகட்குச் செய்த சிறப்பை வியந்து, அவையில் வந்திருந்த அன்பர்களுங் கற்றவர்களுந் திருவாவடுதுறை யாதீன பண்டாரசந்நிதிகளையும், அவ்வுதவியை யுடனிருந்து செய்வித்த சின்னபட்டம் ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாயத்தம்பிரான் சுவாமிகளையும் வாயார வாழ்த்தி வணங்கினர்.

### திருவாளர் சி. என். முத்துரங்க முதலியாரவர்கள், பி. ஏ. செய்த பேருதவி

அடிகள் சென்னைக் கிறித்துவ கல்லூரியில் தமிழாசிரியராய் இருந்த காலத்து அவர்கள்பாற் கல்விபயின்ற மாணவரும், பொதுநல ஊழியத்தில் மிகவும் ஈடுபட்ட பெருஞ் சிறப்பு வாய்ந்தவரும், பெருஞ்செல்வரும் ஆகிய சைவத்திருவாளர் C. N. முத்துரங்க முதலியார் அவர்கள் பி. எ. அடிகளிடமிருந்து கடிதம் பெற்றவுடனே, அடிகள்பாற் போந்து நூறு ரூபா காணிக்கையாக உதவியதொடு, கழக விழாவின் மாப்பேரவை கூடுமிடத்தில் தமது செலவிலேயே அழகிய அகன்ற பந்தலும் அமைப்பித்துக் கொடுத்தார்கள். அதுவேயுமன்றிச், சைவ வேளாளச் சமயற்காரர்களையும் அனுப்பிவைத்தார்கள். சமயலுக்கு வேண்டிய பெரிய பெரிய



பித்தளை எனங்களையும் அனுப்பிவைத்தார்கள். இவர்கள் செய்த இப்பேருதவியினாலேயே விழாவிற்கு வந்த அன்பர்கள் மிகவசதியாக இருக்க இடம்பெற்று மகிழ்ந்தார்கள். இவர்கள்செய்த உதவியினாலேயே கழக விழா மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. இங்ஙனம் உற்றநேரத்திற் பேர் உதவி செய்த இப் பெருந்தகையாளர்க்கு எல்லா நலங்களும் மேன்மேற் பெருகுக என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

### சேலம் திருவாளர் அ. நாகப்ப செட்டியாரும், அவர் அருமைத் தம்பிமாருஞ் செய்த பேருதவி

அம்பலவாணர் அம்மை திருவுருவங்கள் அமைப்பதற்கு இருநூற்றைம்பது ரூபா மனமுவந்து உதவிய சேலம் திருவாளர் அ. நாகப்பசெட்டியாரும், அவர்தம் அருமைத் தம்பியரான திருவாளர் அ. பேராஞ்செட்டியாருந், திருவாளர் அ. மாணிக்கமும் இக் கழகவிழாச் சிறப்பாக நடந்தேறும் பொருட்டுச், சேலத்திலுள்ள அன்பர்கள்பால் தக்கபடி பொருள் திரட்டி அனுப்பியுந், தாமும் எழுபத்தொருரூபா காணிக்கையாய்ச் செலுத்தியும் பேருதவி புரிந்தார்கள். இவர்களது உதவியை நம்பி இவ் வரும் பெருமுயற்சி துவங்கியதற்கு ஏற்பவே, இவர்களுஞ் சிறிதுஞ்சலிப்பின்றி உதவிகள்ஆற்றி இதனை நிறைவேற்றி வைத்தமை பெரிதும் பாராட்டற்பாலதாகும். இவர்களும் இவர்களதுகுடும்பமும் மேன்மேற் செழித்து நீடுவாழ்கவென்று அம்பலவாணர் திருவடிகளை வழுத்துகின்றோம்.

### கழக முதல்மாணவர் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள் செய்த பேருதவி

அடிகளுக்கு முதல் மாணவரும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியரும், ‘தமிழரசு’ என்னுங் கிழமைத்தாளுக்குத் தலைமையாசிரியரும் ஆகிய திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள் அடிகளை ஊக்கமுறுத்தி இம்முயற்சிக்கு உதவிசெய்ய முன்வந்து நின்றதொடு, சென்னையிலுள்ள அன்பர்கள்பாற் பொருள் திரட்டித்தந்தும், தமது தமிழரசு அச்சுக்கூடத்திற் பெரிய விளம்பரங்களும் வேண்டுகோட் கடிதங்களும் மிகவிரைவில் மிக அழகாக அச்சிடுவித்தும் உதவினார்கள். இவர்கள் கல்வியிலும் செல்வத்திலும் உடல் நலத்திலும் மேன்மேற் சிறந்து தம் அருமைக் குடும்பத்தவரோடும் நீடுவாழ்கவென இறைவனை வேண்டி வணங்குகின்றோம்.

### இன்னும் பல உதவிகள் செய்தவர்கள்

சென்னைப் புலால் மறுத்தல் சங்கத்தலைவரும் அறநிலைப் பாதுகாப்புக் கழக அமைச்சரும் ஆன திருவாளர் C. S. சுவாமிநாத முதலியாரவர்

கள் பி. ஏ., தமது புலால் மறுத்தல் சங்கத்தின் விரிவுரையாளரான திருவாளர் இளவழகனார்க்கு ஒரு திங்கள் விடுதிகொடுத்து, நமது கழகவிழா வேலையை அவர் பார்க்கும்படி செய்ததோடு, தாமும் இருபத்தைந்து ரூபா நன்கொடையாக அனுப்பி உதவிசெய்தார்கள். இங்ஙனமே தமிழ்த்திருவாளருஞ் சிவத்தொண்டருமான S. சச்சிதானந்தம் பிள்ளையவர்களும் (பி. ஏ., எல். டி.), தாராபுரம், தமிழ்த்திருவாளர் நா. ஆறுமுகம்பிள்ளையவர்களும், ஜலகண்டபுரம், தமிழ்த்திருவாளர் ஆசிரியர் வரதநஞ்சைய பிள்ளையவர்களும், நாமக்கல் போலிஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் திருவாளர் துடிசைகிழார் சிதம்பரனார் அவர்களும், அவிநாசிப் புதுநந்தனவனம், மறைத்திருவாளர் கருணாலய சுவாமிகளும், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக அமைச்சர் திருவாளர் திருவரங்கம் பிள்ளை யவர்களும், நமது கழக விழாவுக்கு ஆங்காங்குப் பொருளுதவிகள் கிடைக்கும்படி செய்து உதவினமைக்கு அவர்களெல்லார்க்கும் எல்லாம்வல்ல ஆண்டவன் எல்லா நலங்களையும் அருள்வானாக!

இன்னும் சென்னைச் சூளை இம்பீரியல் டைப் பவுண்டரி தலைவர் C. I. தங்கவேலு முதலியாரவர்களும், சென்னை முத்தியால்பேட்டை, மூட்டைக்காரன்தெரு, திருவாளர் M. நடராஜனவர்களும், யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, வக்கீல் வே. நாகலிங்கமவர்களும், தலைக்கு நூறு நூறு ரூபா கழக ஆசிரியர்க்குக் காணிக்கையாக அனுப்பிவைத்தமைக்கு, அவர்களுக்குத் திருவருளால் எல்லா நலங்களும் மேன்மேற் பெருகுவனவாக! இனி, இரங்கோனிலிருந்து எழுபத்தைந்து ரூபா காணிக்கை அனுப்பிவைத்த திருவாளர் S. V. K. V. காசிவிஸ்வநாதனவர்களுக்கும் திருவருள் எல்லா நலங்களும் வழங்குக!

இன்னும் பல்லாவரம் ஊர்மணியம், திருவாளர் சொ. தெய்வரத்தின முதலியாரவர்கள் கழகப் பேரவைக்கு வந்த விரிவுரையாளரை எல்லாம் ஊரவர் சார்பில் தலைவராகநின்று வரவேற்றுச் சிறப்புச் செய்ததுடன், முதல்நாள் மாலையில் நிலையத்துத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்பலவாணரையும் அம்மையையும் சமயாசிரியர் நால்வரையும் ஊரில் எழுந்தருளுவித்துத் திருவிழாவைச் சிறப்பித்தார்கள். இதற்காகவும், ஊரிலுள்ள காளிகோயிலுக்கு ஆடு, கோழி வெட்டுவதை நிறுத்தியதற்காகவும் அவர்கள் திருவருளால் எல்லா நலங்களும்பெற்று இனிது வாழ்க!

இன்னும் தங்கள் தங்களால் இயன்ற அளவு கழகவிழாச் செலவுக்கு ஐம்பதுரூபாயி லிருந்து ஒரு ரூபா வரையில் நன்கொடைகள் அனுப்பி வைத்தும், உணவுச் சீட்டு நுழைவுச் சீட்டுகள் பெற்றுவந்தும் விழாவையுங் கழகப் பேரவையையுஞ் சிறப்பாக நடத்தி இன்புற்ற எல்லா அன்பர்களும் இனிது வாழ்க என்று இறைவனை வேண்டி வழுத்துகின்றோம்.



## கழக விழாவிற்கு வந்த ஊரினர்கள்

இலங்கையில் யாழ்ப்பாணம் கொழும்பு முதலிய இடங்களிலிருந்தும், தென் நாட்டில் தென்திருவிதாங்கூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவையாறு, கும்பகோணம், பன்றுருட்டி, காஞ்சிபுரம், சென்னை, ஆரணி, வேலூர், சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திண்டுக்கல், கோட்டையூர், அரிமளம், கொத்தமங்கலம், கீழச்சிவல்பட்டி, முதலான இன்னும் பற்பல இடங்களி லிருந்தும் அன்பர்கள் வந்து விழாவைச் சிறப்பித்தமை பெரிதும் பாராட்டற்பாலதாகும்.

## விழா ஒழுங்குகள்

வந்தவர்களெல்லாரும் அவரவர்கள் வசதிப்படி மகிழ்ந்து இருத்தற்கு நிலையத்திலும் நிலையத்தை அடுத்துள்ள இல்லங்களிலும் இடங்கள் ஏற்படுத்தி வைக்கப்பட்டன.

நிலையத்தை அடுத்துள்ள அகன்ற ஏரியில் இனிய நீர் நிறைந்திருந்தாலும், பனிக்காலம் ஆதல்பற்றி எல்லாரும் வெந்நீரிலேயே தலைமுழுகும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. உடல் தூய்மை உடை தூய்மை செய்தற்கு நாவிதர், வண்ணாரும் அமர்த்தப்பட்டனர். எல்லாருந் தத்தம் காலைக்கடன்கள் தெய்வ வழிபாடுகள் செய்தவுடனே காலை எட்டு மணிக்கெல்லாம் இனிய சிற்றுண்டி பருகு நீருடன் வழங்கப்பட்டது. காலையில் ஒன்பது மணியிலிருந்து பன்னிரண்டரை மணிவரையில் அவை நடந்தேறியபின் எல்லார்க்குந் திருத்தமான இனிய உணவு ஒரு மணிக்கெல்லாம் வழங்கப்பட்டது. பிற்பகலில் ஐந்து மணிக்குப் பருகுநீரும், மாலை ஒன்பது மணிக்கு அவை நடந்தேறியபின் உடம்பு நலத்துக்கேற்ற இனிய இரா உணவும் எல்லார்க்கும் வழங்கப்பட்டன. இதில் உன்னிக்கற் பாலதொன்று உண்டு:- உடல் நலத்தைப் பழுதுபடுத்துங் காப்பி, தேயிலை சேர்ந்த பருகுநீர் எவர்க்குங் கொடுக்கப்படவில்லை. மயக்கத்தை உண்டுபண்ணும் வெற்றிலை, பாக்கும் எவர்க்குங் கொடுக்கப்படவில்லை. கொத்தமல்லி, சுக்கு, ஏலக்காய், சர்க்கரையிட்டுக் காய்ச்சிய பாலே எல்லார்க்கும் பருகுநீராகக் கொடுக்கப்பட்டது.

## அன்பு விருந்து

இவ்விழாவிற்கு வந்த அன்பர்களில் எவ்வகுப்பினரும் எத்திறத்தவரும் நிலையத்தில் உணவெடுக்குங்கால் ஏதொரு சாதிவேற்றுமையும் எள்ளளவும் பாராது எல்லாரும் அன்பினால் அளவளாவி ஒருங்கிருந்து உணவுகொண்ட காட்சியுஞ் சிறப்புங் கண்டவர்கள் கண்ணையுங் கருத்தையுங் கவர்ந்து எல்லாரையும் அன்புவெள்ளத்தில் திளைக்கச்செய்தன. இத்

தகைய அன்புவிருந்து வேறெங்கும் இவ்வளவு சிறப்பாக நடக்கக் கண்டதுங் கேட்டதும் இல்லை. மற்றையோர்போற் சொல்லளவில் ஒழியாது கழகஆசிரியர் கொண்ட அருட்கோட்பாட்டுக் கிணங்கி, வந்த அன்பர்களெல்லாரும் வேற்றுமைபாராது அன்பினால் அளவளாவிய காட்சி தெய்வத் தன்மை வாய்ந்ததாகவே இருந்தது.

## அம்பலவாணர் திருக்கோயிற் குடமுழுக்கு

சென்ற தைத் திங்கள் ௨௦-ஆம் நாள் பூசத்தன்று காலை ஒன்பது மணிக்குக் கழக ஆசிரியரும் அவர்தம் மாணாக்கர்களுமாக இருந்து புதிது அமைத்த அம்பலவாணர் திருக்கோயிலுக்குத் திருக்குடமுழுக்கு விழாவை நடத்துவாராயினார்கள். இதற்கு முன்னமே மறைமலையடிகள் தாம் ஞானாசிரியரிடத் திருந்துந் தாம் ஆராய்ந்தறிந்த ஞானயோக முறைகளிலிருந்தும் பெற்ற உண்மைகளை அமைத்து ஓங்கார வீட்டினுள்ளே அம்மை அப்பர் குடங்கள் நிறுத்தி, அவற்றெதிரே முத்தீ வேள்வி வளர்த்துத் தேவார திருவாசகச் செழுந்தமிழ் மந்திரங்கள் அடைத்த திரு அம்பலவட்டம் வைத்து உருவேற்றி வழிபாடு செய்துவந்தார்கள். அவ்வழிபாட்டின் முடிபாகப் பூசத்தன்று காலையில் அவர்களே எல்லாக் கிரியைகளுஞ் செய்து வேள்விக் குடங்களில் நிரப்பிய மந்திரநீரை எடுத்து அம்பலவாணர் அம்மை நால்வர் திருவுருவங்கள்மேற் சொரிந்து அதன்பின் கோயிற்கோபுரத்தி னுச்சியிலுஞ் சொரிந்து திருமுழுக்குச்செய்த காட்சி எல்லார்க்கும் பேரின்பத்தைத் தந்தது. அதன்பின் திருவாசக மந்திரஞ் சொல்லி மலர் தூவி வழிபாடுசெய்தார்கள். இறந்துபட்ட வடமொழி மந்திரங்களைச்சொல்லி எவர்க்கும் புலனாகாமல் மற்றைக்கோயில்களில் அன்பின்றிச் செய்யப்படும் வழிபாடுபோலின்றி, எவர்க்கும் புலனாவனவாய்க், கேட்பாருள்ளத்தை உருகச் செய்வனவாய், ஊமைப்பெண்ணைப் பேசவைத்தல், எலும்பைப் பெண்ணாக்குதல், கல்லைக்கொண்டு கடலைக் கடத்தல், முதலைவாய்ப்பிள்ளையழைத்தல்முதலான செயற்கரிய புதுமைகளைச் செய்வித்தனவாய்த், தொன்றுதொட்டு உயிரோடு ஆற்றல் மிகுந்து உலவுவனவாய் உள்ள செந்தமிழ்மா மந்திரங்களை ஆசிரியர் உள்ளமுருகி இனிய குரலிற் சொல்லி வழிபாடு செய்யுங்கால் அதனை உடனிருந்து கண்டவர்களெல்லாருள்ளமும் நெக்குநெக்குருக இறைவன்பாற் பேரன்புகொண்டு தம்மை மறந்து நின்றார்கள். இதனால் தாம்பெற்ற இன்பத்தையும் மகிழ்ச்சியையும் வந்தவர்களெல்லாரும் பேசிப்பேசி மகிழ்ந்தனர். வழிபாடு முடிந்ததும் ஆசிரியர் வந்தவர்களெல்லாரையும் இறைவனருகே வரச்செய்து அவரவருந் தாந் தாமே மலர் தூவி வணங்கச் செய்தார்கள். அதன்பின் ஆசிரியர் தாமே எவர்க்குந் திருநீறு கொடாமல் திருநீற்றுத் தட்டை வெளியே வைத்து அவரவரே திருநீற்றை எடுத்து நெற்றியில் இட்டுக்



கொள்ளும்படி செய்தார்கள். அதன்பின் விழாவிற்கு வந்தவர்களிற் பலர் ஆசிரியர் அடிகளுக்குக் காணிக்கைவைத்து அவர்களை வணங்கினர்.

இவ்வாறு நடத்தப்பட்ட இத் திருக்குடமுழுக்கு விழாவிற் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் நம்மனோர் முன்னேற்றத்தைக் கருதுவோர் எல்லாரும் நினைவில்வைத்து எங்கும் பரவச்செய்யற் பாலனவாகும். இதில் முதற் சீர்திருத்தம், தம்மைத்தாமே உயர்வாக நினைத்து எத்துணைச்சிறந்தவர்களாயிருந்தாலும் பிறரையெல்லாம் இழிவு படுத்தும் பார்ப்பனக்குருக்களைக்கொண்டு எதொரு கிரியையுஞ் செய்யாமல் எல்லாங் கழக ஆசிரியரே நடத்தியதாகும். இரண்டாவது சீர்திருத்தம், மக்களுக்குப் புலனாகாத உயிரற்ற வடமொழி மந்திரங்களை அறவே ஒழித்து, எல்லார்க்கும் புலனாகும் உயிருள்ள தேவார திருவாசக மந்திரங்களைக்கொண்டே எல்லாக் கிரியைகளையும் ஞானயோகப் பொருளமைத்து நன்குசெய்வித்ததேயாகும். மூன்றாவது சீர்திருத்தம், அவரவருந் தாந்தாமே கடவுளை மலர் தூவி வணங்காமல் அவர்களுக்காக இடையிலே ஒரு குருக்களை வைத்து நடத்தும் வழக்கத்தை ஒழித்து, விழாவுக்கு வந்தவர்களெல்லாருங் கோயிலினுள்ளேசென்று தாந்தாமே இறைவனை மலர் தூவி வணங்கவைத்ததேயாகும். நான்காவது சீர்திருத்தம், திருநீறுகொடுக்குங்காற் பார்ப்பனருக்கு முன் கொடுத்தலும், பார்ப்பன ரல்லாதார்க்குக் கொடுக்கையிலுஞ் செல்வமுந் தலைமையும் உடையவர்களுக்கு முன்கொடுத்து மற்றவர்களுக்குப் பின்கொடுக்கும் வேற்றுமையைக் கடவுள் எதிரிலுங் காட்டும் மற்றைக் கோயில்களிற் போலாது, அவரவரே தட்டிலிருந்த திருநீற்றை எடுத்து இட்டுக்கொள்ளும்படி செய்ததேயாகும். இத்தகைய சிர்திருத்தங்கள், வருத்தத்துக்கிடமான போலிவேற்றுமைகளையும் பொருந்தா ஏற்பாடுகளையும் அறவே ஒழித்து, எல்லாரையும் அன்பினால் அளவளாவ வைத்து இறைவன் திருவடிக்கண்ணும் மெய்அன்பு மிகச்செய்தல் கண்டு எல்லாரும் இவற்றை வியந்து பேசினர்.

## மணிமொழி நூல்நிலையத் திறப்பு

திருக்குடமுழுக்கு விழாக் காலைப் பதினொன்றேமுக்கால் மணிக்கு முடிந்தவுடனே, எல்லோரையுங் கோயிலினின்று கீழே இறங்கச்செய்து, மாணாக்கர் திரு. தூக்கியதிருவடி கதவந் திறக்கப்பாடிய திருப்பதிகம் ஓதச்செய்து, நிலையத்தின் கீழும் மேலும் அமைக்கப்பட்டுள்ள மணிமொழிநூல்நிலையத்தை அடிகள் திறந்தருளினார்கள்.

## பொதுநிலைக்கழக இருபதாமாண்டு நிறைவுவிழாப் பேரவை

### முதல்நாள் நிகழ்ச்சி: தைத்திங்கள் உ௰-ம் நாள் (2-2-1931)

பிற்பகல் 3–30 மணிக்கு அவை துவங்கலாயிற்று. அவைக்குவந்த விரிவுரையாளர்கள் எல்லாரையும், பல்லாவரம் ஊரவர் சார்பாக மணியகாரர் திருவாளர் தெய்வரத்தின முதலியாரவர்கள் தலைமையாய் நின்று வரவேற்று, எல்லார்க்கும் பூமாலை சூட்டிச் சிறப்புச்செய்தனர். தேவார திருவாசகங்கள் இன்னிசைக் கருவிகளுடன் இனிது ஓதிக் கடவுளை வழிபட்டபின், ஆசிரியர் மறைமலையடிகள் அன்பர்கள் மகிழ்ச்சியினிடையே அவைத்தலைவராக எழுந்தருளினார்கள். திருவாவடுதுறை யாதீன பண்டார சந்நிதிகளான ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகசுவாமிகள் அடிகட்கு அனுப்பிவைத்த தங்கப்பட்டாடையினையும் பொற்சரிகை பின்னிய காவியாடையினையும், அவினாசி மறைத்திரு கருணாலயசுவாமிகள், பண்டார சந்நிதிகளின் வள்ளன்மையினையும் அடிகளின் அருமை பெருமைகளையும் எடுத்துரைத்து, அவைகளை அடிகண்மேல் அணிந்தருளினார்கள். அதன்பிற் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியருங், கழக முதன்மாணவருமான திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள், பொது நிலைக்கழக வரலாறும் நோக்கமும் எடுத்து மிக விளக்கமாக விரித்துரைத்தார்கள். அதன்பிற் கழகமாணவர் மறைமலை என்பவரால் வரவேற்புத்தாள் படிக்கப்பட்டு, அதன்படிகள் எல்லார்க்கும் வழங்கப்பட்டன. அதன்பிற் கழகமாணவர் இளவழகனாரால் விரிவுரையாளர்க்கு வரவேற்பும் பொருளுதவி செய்தார்க்கு நன்றியுங் கூறப்பட்டன. அதன்பின், ஆசிரியர் மறைமலையடிகள் அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையும் ஞானபோதகமும் என்னும் அரியபொருளை எடுத்துச் சிறிதேறக்குறைய இரண்டுமணி நேரம் வரையில் அவையினருள்ளம் இறைவன் திருவருட் பேரின்பத்திற் றோய்ந்து மகிழ்ந்தவண்ணமாய் நிற்கத், தமது தலைமைப்பேருரையை மிகவும் இனிதாக நிகழ்த்தினார்கள். அத் தலைமைப்பேருரை முழுதும் இதன்பின்னே பதிக்கப்பட்டிருக்கின்றது; அதனை அங்கே கண்டுகொள்க. அதன்பின், மாலை 6-மணிக்குச் சென்னை வழக்கறிஞர் திரு. E. N. தணிகாசல முதலியாரவர்கள், B. A. B. L., "மாணிக்கவாசகரைப்பற்றி நமக்கென்ன தெரியும்" என்னும் பொருளை எடுத்து ஆங்கிலமொழியில் மிகவும் அழகாகப் பேசினார்கள். 'மாணிக்கவாசகர் வரலாற்றைப்' பற்றியும் அவரது காலத்தைப்பற்றியும் ஆசிரியர் மறைமலையடிகள் இயற்றிய நூலைத் தாம் இன்னும் படிக்கவில்லையென்றும், ஆதலால் மாணிக்கவாசகர் வரலாற்றைப்பற்றியுங் காலத்தைப்பற்றியுந் தாங்கொண்ட ஐயப்பாடுகளை அடிகளே நீக்கற்பாலாரென்றுஞ் சொல்லி யமர்ந்தனர். அதன்பின், அவர் கேட்டுக்கொண்டபடியே, அடி



கள் மாணிக்கவாசகர் வரலாற்றைப்பற்றிய திட்டமான குறிப்புகளையும், அவரது காலத்தைப்பற்றிய தீர்மானமான முடிபுகளையும் நன்கெடுத்து விளக்கி அவ்வளவோடு அன்றைய அவையை இனிது நிறைவேற்றிவைத்தார்கள். அதன்மேற் பல்லாவரத்திலுள்ள அன்பர்கள், நிலையந்துள்ள அம்பலவாணரை ஊர்வலஞ்செய்வித்துக் காண விரும்பினபடியால், அவர்கள் சார்பாக மணியகாரர் திருவாளர் தெய்வரத்தின முதலியாரவர்கள் இறைவனையும் இறைவியையும் நால்வரையும் பூமாலைகளாலும், மணிக்கலன்களாலும் ஒப்பனை செய்வித்து, விமானத்தில் எழுந்தருளப்பண்ணி, இரவு 9 மணி முதல் 12 - 30 மணிவரையில் நகர்வலஞ் செய்வித்தார்கள். அவைக்கு வந்திருந்த அன்பர்களுந் துறவிகளும் அடிகளோடு இறைவனைப் பின்பற்றி வந்தார்கள். தேவாரம் ஓதுவார் கூட்டமும் மிக இனிதாகத் தேவாரம் ஓதியபடியாய் இறைவன் பின்னே சென்றது. மேளதாள முழக்கமோடு அடியார்கூட்டமுந் தேவாரக்கூட்டமும் உடன்வர இறைவன் எழுந்தருளுதலைக்கண்ட ஊரவரெல்லாரும், அன்பினால் உள்ளமுருகிக் கற்பூர விளக்கெடுத்து இறைவனை வணங்கி மகிழ்ந்தனர். இறைவன் நிலையத்துக்குத் திரும்பி வந்தெழுந்தருளிய பின், அன்பர்களெல்லாருந் திருவமுதுகொண்டு துயில்கொண்டனர்.

### இரண்டாம் நாள் நிகழ்ச்சி, (3-2-1931)

செவ்வாய்க்கிழமை காலை 9-மணிக்குத் திரும்பவும் பேரவை தொடங்கிற்று. திருவாளர் காவித்தண்டலம் வேதாசல முதலியாரவர்கள் "அருளாட்சி" என்னும் பொருள்பற்றியுந், திருக்குறள் விளக்க ஆசிரியர் திருவாளர் கி. குப்புசாமி முதலியாரவர்கள், "மனைவாழ்க்கையும் புதல்வர்ப்பேறும்" என்பதுபற்றியும், அரும் பொருள்கள் பலவற்றை எடுத்து விளக்கி நன்கு பேசினார்கள். அதன்பிற், சென்னை முத்தியால்பேட்டை உயர்தர பாடசாலை ஆசிரியர் திருவாளர் மயிலை முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள் "உலகிற் குதவிசெய்யும் பெரியார்கள்" என்பது பற்றி மிக அழகாகப் பேசினார்கள். அவர்கள் பேசிய பொருள்களிற் குறிப்பிடத்தக்கவைகளை அவைத்தலைவர் அடிகள் நன்கெடுத்து விளக்கியதொடு, முன்னையிருவர் கூறியவைகளில் ஆராய்ந்து வேறு முடிபு செய்யத்தக்க குறிப்புகளையும் நன்கெடுத்துக்காட்டி, அவைகளை அவையினருள்ளத்திற் பதியச்செய்தார்கள்.

மறுபடியும் பிற்பகல் 3-45மணிக்கு அவைதொடங்கிற்று. சென்னை நாமகள் கழகத் தமிழாசிரியர் திருவாளர் M. V. வேணுகோபால பிள்ளையவர்கள் "தாய்மொழிப் பயிற்சி" என்னும் பொருள்பற்றி இனிய தமிழிலே விளக்கமுற விரிந்தவுரை ஒருமணி நேரம் வரையில் நிகழ்த்தினார்

கள். பின் வேலூர் மாகாணக் கல்வித்தலைவர் திருவாளர் S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், பி.எ.,எல்.டி., "இராமலிங்கசுவாமிகளும் பழமையையொட்டிய சீர்திருத்தங்களும்" என்னும் பொருள்பற்றி ஒருமணி நேரம் மிகவும் ஆழ்ந்த ஆராய்ச்சியொடு பேசினார்கள். அப்போது கல்வியிற் சிறந்த ஆங்கிலப் பெருமாட்டிமார் இருவர் அவைக்கு வந்தமையின், அவர்கள் பொருட்டு அவ்விரிவுரைப் பொருளை ஆங்கிலத்திலுஞ் சுருக்கமாகக் கூறும்படி அவைத்தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்ள, அதற்கிணங்கிப் பிள்ளையவர்கள் அப்பொருளை அரைமணி நேரம் வரையில் மீண்டும் மிகவும் அழகாகப் பேசினார்கள். அதன்பின் 'நவசக்தி' ஆசிரியர் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் "ஆளுடைய பிள்ளையாரும் இயற்கையும்" என்னும் பொருள்பற்றி மிகவும் நன்றாகப் பேசினார்கள். அதன்பிற், சென்னைக் கோவிந்தப்பநாய்க்கர் உயர்தரபாடசாலைத் தலைமை ஆசிரியர் திருவாளர் மணி. சோமசுவர முதலியாரவர்கள், பி. எ., எல். டி., "ஒழுக்கமோ கடவுளுணர்ச்சியோ எதுசிறந்தது?" என்னும்பொருள்பற்றி ஆங்கிலத்திற் சிறந்த கருத்துக்களை யமைத்து ஒருமணி நேரம்வரையில் திறம்படப் பேசினார்கள். அதன்பின், அவைத்தலைவர் அவர்கள், குறிப்பிடத்தக்க சிறந்த பொருள்களை யெடுத்து மிக விளக்கமாகவும், அழகாகவும் இரண்டுமணி நேரம்வரையிற் கேட்டார் மனம் ஐயமறப்பேசி, அவையினரைக் களிக்கச் செய்தார்கள்.

## மூன்றாம் நாள் நிகழ்ச்சி, (4-2-1931)

புதன்கிழமை காலை 9-30 மணிக்குத் திரும்பவும் பேரவை தொடங்கிற்று. அவிநாசிப், புதுநந்தனவனம், மறைத்திருவாளர் அ. சி. கருணாலய சுவாமிகளவர்கள் "ஒருவர்க் கொருவர் உதவிசெய்தல் வேண்டுமா?" என்னும் பொருள்பற்றிச் சிறந்தகருத்துக்களை யெடுத்து அழகாகவும் இனிமையாகவும் பேசினார்கள். அதன்பின், வலம்புரி அலர்மேலுபெண் கல்லூரித் தலைமையாசிரியர் திருவாளர் ப. இராமநாத பிள்ளை யவர்கள் "கலித்தொகை நூற்சிறப்பு" என்னும் பொருள்பற்றிச் சிறந்த கருத்துக்களெடுத்துச் சுருக்கமாக முக்கால் மணிநேரம் வரையில் அழகாகப் பேசினார்கள். அவர்கள் பேசிய சிறந்தகருத்துக்களை அவைத்தலைவர் அவர்கள் அவையோர் மனத்தில் அழுந்திப் பதியும்படி மிகத்தெளிவாக விளக்கி அவையோரை மகிழ்வித்தார்கள்.

மறுபடியும் பிற்பகல் 3-30 மணிக்கு அவை தொடங்கிற்று. நன்னிலம், போர்டு உயர்தரபாடசாலைத் தமிழாசிரியர் திருவாளர் R. P. அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள் "திருஞானசம்பந்தர் வரலாற்" றினை மிகவும் உருக்கமாக எடுத்துப் பேசினார்கள். லால்குடி உயர்தரபாடசாலைத் தமிழாசிரியர் திருவாளர் அ. மு. சரவண முதலியாரவர்கள் "திருவாசகமும்



பரஞ்சோதி முனிவரும்" என்னும் பொருள்பற்றி ஆராய்ச்சி நிறைந்த அரியவுரையினை இன்றமிழிற் பேசினார்கள்.

அதன்பிற், கழகமுதன்மாணவரும், பச்சையப்பன்கல்லூரித் தமிழாசிரியருமான திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள் அடிகளின் உடன்பாடுபெற்று, இக்கால நாகரிகத்துக்குந் தமிழ்மக்களின் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதனவான பல சீர்திருத்தத் தீர்மானங்களைக்கொண்டுவந்து, அவைகளை இனிதுவிளக்கிக்காட்டி, அவையினரெல்லாரின் கருத்தொற்றுமைகொண்டு அவைதம்மை நிறைவேற்றிவைத்தார்கள். அதன்பின் வேலூர், உர்ஹீஸ்கல்லூரி ஆசிரியர் திருவாளர் க. ப. சந்தோஷமவர்கள்,பி.எ.,எல்.டி.,"அறஞ்செய்வதெதற்கு?"என்பதனை எடுத்து அவையினர் மகிழ்ந்து மகிழ்ந்து நகும்படி மிகவுந் திறமையாகப் பேசினார்கள். அதற்குப்பின்,ஜலகண்டபுரம்,ஆசிரியர் திருவாளர் வரதநஞ்சைய பிள்ளையவர்கள் "பண்டைக் காலச் செல்வருங் கல்விமான்களும்" என்பதனை விளக்குவான் புகுந்து, பழைய சங்க இலக்கியங்களிற் காணப்படுஞ் செய்யுட்களைக்கொண்டு, பழைய காலத்திருந்த செந்தமிழ்ப் புலவர்க்குஞ் செல்வர்கள் அரசர்கட்கும் இருந்த நெருங்கிய நேய ஒற்றுமையினை மிகவுந் தெளிவாகவும் அழகாகவும் எடுத்துரைத்தார்கள். அதன்பின், அவைத்தலைவரவர்கள் நடைபெற்ற விரிவுரைகளிற் குறிப்பிடத்தக்கவைகளை நன்கெடுத்து விளக்கி அன்றைய அவையை இனிது நிறைவேற்றி வைத்தார்கள்.

## நான்காம் நாள் நிகழ்ச்சி, (5-2-1931)

வியாழக்கிழமை காலை 9-15 மணிக்குப் பேரவை தொடங்கிற்று. தாராபுரம், திருவாளர் நா. ஆறுமுகம் பிள்ளையவர்கள் "தமிழை வளர்ப்பதெப்படி?" என்பதனைக் கேட்டார் மனம் பற்றும்படி விளக்கமாகவும், வளர்க்கும்முறை காட்டி அழகாகவும் மொழிந்திட்டார்கள். அதன்பின், திருவையாற்று வடமொழிக்கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் G. சோமசுந்தர தேசிகர் அவர்கள் "நூற்பயன்" என்னும் பொருளை நற்றமிழிலே விளக்கமாகவும் அழகாகவுஞ் சிறந்த ஆராய்ச்சி முறையில் நூற்பயனை அவையினர் அப்பொழுதே நுகர்ந்ததுபோல் மகிழும்படி பேசினார்கள். அதன்பின், அவைத்தலைவர் அவர்கள், அவர்கள் பேசிய சிறந்த கருத்துக்கள் அவையினர் மனத்தகத்திற் றேங்குமாறு நன்கு விளக்கி முடித்தார்கள்.

மீண்டும் பிற்பகல் 3-30 மணிக்குப் பேரவை தொடங்கிற்று. திருநெறித்தொண்டர்குழாம் ஆசிரியர் திருவாளர் கெ. ஆறுமுகம் பிள்ளையவர்கள் "சமயாசிரியர்களும் அவர்தம் அறிவுரைகளும்" என்பதுபற்றி அருமையான கருத்துக்களை மிக அழகாகவும் விளக்கமாகவும் நுட்பமாகவும்,

பேசினார்கள். அப்பொழுதே அவையினர் அவர்கள் உரையைக்கேட்டுத் தொண்டர்கள் நிலையை யடைந்தவர்களானார்கள்; மிக மகிழ்ந்தார்கள். அதன்பின், திருவாளர் பண்டிதர் இராசையனாரவர்களும், யாழ்ப்பாணம் வழக்கறிஞர் திருவாளர் வே. நாகலிங்கமவர்களுங் கழக அமைப்பைப்பற்றியும் நோக்கங்களைப்பற்றியும், இனிச் செய்யவேண்டுவன பற்றியும் மிக அழகாகப் பேசினார்கள். அதன்பின் இராசதானிக் கல்லூரிப் பெருமாட்டியார் திருநிறைசெல்வி த. இராஜேசுவரி யம்மையார் அவர்கள் "செல்வமும் வறுமையும்" என்பதனைத் தெளிவாகவும் இனிமையாகவும் உரை நிகழ்த்தினார்கள். அதன்பின், Retired Superintending Engineer திருவாளர் P. V. மாணிக்க நாயக்கர் அவர்கள், பீ. ஈ., "கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்" என்பதனைச் சிறந்த ஆராய்ச்சியோடு அவையினர் நகும்படி அழகாக விளக்கினார்கள். அதன்பின் அவைத்தலைவர் அவர்கள் விரிவுரையாளர் கருத்துக்களிற் குறிப்பிடத்தக்கவைகளை எடுத்துத் தெளிவாகவும், இனிமையாகவும் அவையினர் மனம் நெக்குநெக் குருகும்படி இரண்டு மணிநேரம்வரையில் விளக்கினார்கள். அவையினர் என்றுமில்லா மகிழ்வையடைந்து இனி, இப் பேரவைபோற் கூடுவது கூட்டுவது, கேட்பது கேட்பிப்பது எந்நாளோவென எண்ணியெண்ணிக் களிதுளும்பினர்.

கடைசியில் விரிவுரையாளர்க்கும் ஏனையோர்க்கும் நன்றிகூறி மலர் மாலைகள் சூட்டப்பட்டன. ஆசிரியர் மறைமலையடிகளையும் அவர்கள் பொதுநிலைக்கழகத்தையுங் கழக விழாவையும் பற்றிச் சிறப்பாக வாழ்த்தி அங்கங்கு இருந்து அன்பர்கள் எழுதியனுப்பிய வாழ்த்துப்பாக்கள் படிக்கப்பட்டன. திருவாளர் மணி. கோடீசுவர முதலியாரவர்கள் தமிழகத்துக்கு இக்காலத்தில் அடிகள் ஆற்றுந் தண்டமிழ்ச் சிவத்தொண்டைப் பாராட்டி நன்றிகூறி அவர்கட்கு அழகிய ரோசாமலர் மாலை சூட்டினர். பொதுநிலைக் கழகத்து அம்பலவாணர் திருக்கோயிலுக்கு, அம்பலவாணர், சிவகாமி,நால்வர்முதலியதிருவுருவங்கள் மிகஅழகாக அமைத்துக்கொடுத்த மயிலாப்பூர், திருவாளர் பட்டு ஆசாரியவர்கட்கும், அத் திருவுருவங்கள் எழுந்தருளுதற்குக் கோயில், மாளிகை கட்டிய கொல்லத்துக்காரர்க்குந் தங்கக்காப்புகள் ஆடைகள்பரிசளிக்கப்பட்டன. தச்சர்க்குப் பவுனும் ஆடையும் பணியாளர்முதலிய எல்லார்க்கும் பட்டுக்கம்பிகள்ஓடிய உயர்ந்தஆடைகளும் பரிசளிக்கப்பட்டன. பிறகு, ஆசிரியர் இப்பேரவையினைக் கூட்டுதற்கு உதவியாய்நின்ற கழகமாணவர்கள் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள், திருவாளர் இளவழகனாரவர்கள், திருவாளர் அ. கனகராயர் அவர்கள், திருவாளர் தி. சு. மறைமலையவர்கள் முதலாயினாரைப் பற்றி அவையினர்க்கு எடுத்துரைத்துப் பூமாலைசூட்டி மகிழ்வித்துமகிழ்ந்தார்கள். திருவையாற்று வடமொழிக்கல்லூரியி லிருந்து வந்த தமிழ்



மாணவர் திருத் தூக்கியதிருவடி, திருப் பொன்னுசாமி, திருப் பொன்னம்பலம், திரு நமச்சிவாயம் முதலியோருஞ், சேலத்திலிருந்துவந்த திரு அ. மாணிக்கம், திருச் சிவநேசம், பரங்கிமலை மறைமலையடிகள் கல்விக் கழகத் தொண்டர்களும் ஆற்றியதொண்டின் அருமையினைப் பாராட்டி அவர்கட்குந் தேவாரமோதிய ஓதுவார்கட்கும் மலர்மாலைகள் சூட்டப்பட்டன. பின் அவையோ ரனைவரும் மேலே அம்பலவாணர் கோயிற்குச்சென்று இறைவனையும் இறைவியையும் நால்வரையுங் கசிந்து தொழுது நின்றனர். இங்ஙனம் பொதுநிலைக்கழகப் பெருவிழா நன்கு நிறைவேறியது.

பல்லாவரம் பொதுநிலைக் கழக மாளிகை அகன்றதோர் ஏரியின் கரையிற் பூந்தோட்டஞ் சூழ அமைக்கப்பட் டிருத்தலாலும், இக் காலத்தில் ஏரி நிறைய நீர் இருத்தலாலும் வெளியிலிருந்து அவைக்கு வந்த அன்பர்கட்கு எல்லாம் வசதியாயிருந்தன.

காலையிலெழுந்து ஏரிப்பக்கங்களில் வெளியே செல்லவும், உடனே கழக மாளிகையில் வெந்நீரில் தலைமுழுகவும், ஈர உடைகளைத் தோட்டத்தில் உலரவைக்கவும், பந்தரில் எல்லாரும் அமைதியாயிருக்கவும், ஏனை நேரங்களில் தோட்டத்தில் உலாவவும் எல்லாம் வசதியா யிருந்தன. காலையிற் சிற்றுண்டியும் பகலிலும் இரவிலும் இனிய உணவும் பிற்பகலிலும் இரவில் உண்டபின்னும் பாலும் அளித்தமையான் எல்லார்க்கும் வசதிக் குறைவாவது களைப்பாவது இல்லை. ஏராளமான நாற்காலிகள் சமுக்காளங்கள் முதலிய இருக்கை படுக்கை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட் டிருந்தன. இத்தகைய நலங்களினால் எல்லாரும் இன்புற்று விரிவுரைகாரர் இன்சொன்மாந்தி, அம்பலவாணர் அருள்பெற்றுக் கழக குரு மறைமலையடிகள் திருவடிகளை வணங்கி வழுத்தி நலம் பெற்றுப் பொதுநிலைக்கழக விழாவைப் போற்றி இங்ஙனமே ஆண்டுதோறும் இது நடைபெறல் வேண்டுமென வாழ்த்தினர்.

எல்லாம்வல்ல அம்பலவாணர் திருவருளாலுங் கழக குரு மறைமலையடிகள் பேரருளாலும் இத்தகைய பெருஞ் சிறப்புடன் பொதுநிலைக்கழகப் பெருவிழா இனிது நிறைவெய்தியது. மலாய்நாடு, யாழ்ப்பாணந், திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை, செட்டிநாடு, மலையாளந், திருவையாறு, கும்பகோணஞ், சிதம்பரஞ், சேலம் முதலான தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அன்பர்கள் மிகுதியாக விழாவுக்கு வந்திருந்தமையால், இப் பொதுநிலைக் கழகப் பெருவிழா தமிழ்நாட்டுக்கே ஒரு பெரிய புத்துணர்ச்சியை எழுப்பியிருக்கின்றதென்பதில் ஐயமில்லை.

---

## சீர்திருத்தத் தீர்மானங்கள்

கழகமுதன் மாணவருஞ், சென்னைப், பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமான திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள் பல்லாவரம் பொதுநிலைக்கழகப் பேரவையின் மூன்றும் நாள் கொண்டு வந்து, ஆசிரியர் மறைமலையடிகளின் உடன்பாடு பெற்றும், அவையினரெல்லாரின் முழு உடன்பாடு பெற்றும் நிறைவேற்றி வைத்த சீர்திருத்தத் தீர்மானங்கள் வருமாறு:—

I மடம்.

1. திருவாவடுதுறைப் பண்டார சந்நதிகளான ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்கதேசிக சுவாமிகள் நமது பேரவை நிகழ்ச்சிகளைப் பாராட்டி நன்கொடை வழங்கியும், மறைமலையடிகளார்க்கு வரிசை செய்துஞ் சிறப்பித்தமைக்காக, அச் சைவத்திருத்தலைவருக்கு இக்கழகத்தார் தமது நன்றியறிதலைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றனர்.

2. திருப்பனந்தாள் ஆதீன பண்டார சந்நதிகள், நமது கழகப் பேரவையிலே புலவர் நிகழ்த்திய விரிவுரைகளை யெல்லாம் அச்சிட்டு வெளியிட ஆகும் பொருட்செலவைத் தருவதாக ஒப்புக்கொண்டமைக்காக, அச் சைவத் திருத்தலைவருக்கு இக் கழகத்தினர் தமது நன்றியறிதலைத் தாழ்மையுடன் அறிவித்துக் கொள்கின்றனர்.

3. சைவமடாதிபதிகள் அனைவருந் தமிழ்க்கல்விக்குஞ், சைவசமய விளக்கத்திற்குந், தமிழ்ச் சைவநூல் வெளியீடுகட்கும் மிக்க பொருள் தக்க வழியிற் செலவிடவேண்டுமென, அத் திருமிகு பெரியார்கள் எல்லாரையும் இக் கழகங் குறையிரந்து வேண்டுகின்றது.

4. மடாதிபதிகள், தமிழர் இல்லங்களிலே நடைபெறலாகுஞ் சடங்குகளை யெல்லாஞ் செய்விப்பதற்கும், வேற்றுமையின்றி எல்லாக் குலத்தினர்க்கும் பொதுவாகச் சமயக்கிரியைகளைக் கற்பிப்பதற்கும் வேண்டும் முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென இக் கழகத்தார் விரும்புகின்றனர்.

II கோயில்.

5. கடவுள் வழிபாடு ஆற்றும் ஒருவர் தவிர, ஏனையோர் எல்லார்க்குங் கடவுளை வணங்கும் முறையில் ஏதொரு வேற்றுமையுங் கோயில்களிலே இருத்தலாகாதென்றுந், திருநீறு வழங்கும் முறையிலும் உயர்வு தாழ்வு கருதாது மக்கள் நிற்கும் வரிசை முறையே அதனை வழங்கல் வேண்டுமென்றும் இக் கழகத்தார் கோயிற்றலைவர்களைக் கேட்டுக்கொள்கின்றனர்.

6. பழந்தமிழ்க் குடிமக்கள் எல்லாரையும் உயர்வு தாழ்வு பாராது, தூய்மையாகத் திருக்கோயிலிலே சென்று இடையூறின்றி வழிபாடு செய்தற்கு வேண்டும் முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென, இக் கழகத்தார் கோயிற்றலைவர்களையும் பொதுமக்களையுங் கேட்டுக்கொள்கின்றனர்.



(கடவுளை வணங்கும் முறையில் எவரிடத்தேனும் உயர்வு தாழ்வு காட்டுதல் அன்புக்கும் அருளுக்கும் இழுக்காகும். எல்லாமக்களுங் கடவுளாற் படைக்கப்பட்டவர்களே யாதலால், அவர்களெல்லாருங் கோயிலிலே சென்று தம்மைப் படைத்த இறைவனை வழிபடுதற்கு முழு உரிமை உடையராவர். புத்தர், சமணர், கிறித்துவர், மகமதியர், பாரசிகர் முதலான சமயத்தவர்களெல்லாருந், தத்தங் கோயில்களிற் சென்று ஏதொரு வேற்றுமையுமின்றி இறைவனை வணங்கி அளவளாவி வருவதல்லாமலுந், தம் மதத்தவரல்லாத அயல் மதத்தவர்களுந் தம்முடைய கோயில்களுக்கு வந்தால் அவர்களைத் தடைசெய்யாமல் உள்ளே சென்று வணங்கவிடுகின்றனரல்லரோ? இங்ஙனம் உலகத்திலுள்ள பெரும்பகுதியினரான மக்களெல்லாருங் கோயில் வழிபாட்டில் ஏதொரு வேற்றுமையுங் காட்டாமல், அன்பினால் அளவளாவி வருதலை நேரே கண்டு வைத்தும், இத் தமிழ்நாட்டிலுள்ள சிறுபகுதியினரான மக்கள் மட்டும், அன்பும் இரக்கமுமின்றி வேற்றுமைகாட்டித், தம்முள்ளே சிற்சில வகுப்பினரைக் கோயிலினுள்ளே வணங்கவிடாமல், அவரை அடித்துத் துரத்தி, விலங்கினங்களைப் போலப் போராடுவது உலகத்தவரெல்லாராலும் பழித்துப் பேசப்படுகின்றதன்றோ? இப் பெரும்பழியை உடனே நீக்கிக்கொள்ளாதவரையில், தமிழ்நாட்டவர் விலங்கினங்களாகவே ஏனை நாகரிகமக்களாற் கருதப்பட்டு, அன்பும் ஒற்றுமையும் இல்லாராய், அதனால் இறைவன் திருவருட்பேற்றிற்கும் உரியராகாராய்ப் பிறர்க்கு அடிமையாகவே கிடந்தொழிவர். ஆதலால், இத்தீர்மானத்தை உறுதியாகப்பிடித்து இதனை உடனே வழக்கத்துக்குக் கொணர்ந்து தமிழ்நாட்டவர்கள் உய்வார்களாக!)

7. கோயில்களிலே பொது மாதர்க்குப் பொட்டுக்கட்டும் வழக்கம் அடியொடு தொலையவேண்டுமென்றும், இனி அம்மாதரைக் கொண்டு ஏதொரு திருப்பணியுங் கோயிலிலே செய்விக்கலாகாதென்றும் இக் கழகத்தினர் வற்புறுத்துகின்றனர்.

(காமநினைவை விட்டு இறைவனை வணங்கிப் பிறவியைத் தூய்மை செய்தற்கன்றோ எல்லாருங் கோயிலுக்குச் செல்கின்றனர். அப் புனித இடத்திலுங் காமநினைவை எழுப்பி ஆண்பெண் பாலாரைக் கெடுத்தற்கு எளிதிலே இடஞ்செய்வாரான பொதுமாதரைத் திருக்கோயிற் றிருப்பணிக்கு வைத்தல் எவ்வளவு தீயதாகும் என்பதை ஒவ்வொருவரும் நன்குணர்ந்துபார்த்து, இதனை உடனே நீக்குதற்குக் கோயிற்றலைவர்களைத் தூண்டி முயலல்வேண்டும். சைவ வைணவரல்லாத மற்ற மதத்தவர் கோயில்களிலே இத்தகைய தீய ஏற்பாடு இல்லாமையால், அவர்களெல்லாரும் நம்மவரை இதற்காகவும் பெரிதும் இழித்துப் பேசுதலைக் கண்ட

துங் கேட்டதும் இல்லையா? பிறர் பழிப்பை அஞ்சியாவது இத் தீய ஏற்பாட்டை ஒழித்து விடுங்கள்!)

8. வேண்டப்படாதனவும் பொருட்செலவு மிகுந்தனவுஞ், சமய உண்மைக்கு முரண்பட்டனவும், அறிவுக்குப் பொருத்தமற்றனவுமாக வுள்ள திருவிழாக்களையுஞ் சடங்குகளையுந் திருக்கோயில்களிலே செய்தல் முற்றுங் கூடாதென்றும், வேண்டப்படும் விழாச் சடங்குகளையுங் குறைந்த செலவில் இசைந்தமுறையில் தூய்மையாக நடத்தல் வேண்டுமென்றும் இக்கழகந் தீர்மானிக்கின்றது.

9. கோயில் மண்டபங்கள் தமிழ்மறை ஓதுதற்குஞ் சைவம் விளக்குதற்கும் பயன்படும்படி ஓதுவார்களையும் புலவர்களையும் ஏற்படுத்திக், கோயிற்றலைவர்கள் சைவ நலங்களைப் பரவச்செய்யுங் கடமையை ஊக்கத்துடன் செய்யவேண்டுமென இக்கழகம் முடிவுசெய்கின்றது.

10. ஒவ்வொரு கோயிலிலும் வழிபாடு முடிந்ததும், அனைவரும் ஓரிடத்தே அமர்ந்திருந்து இறைவனை நினைந்துருகுவதற்கு ஏற்ற இசைவுகளைக் கோயிற்றலைவர்கள் ஏற்படுத்த வேண்டுமென இக்கழகம் வேண்டுகின்றது.

III தலம்.

11. சாரதா சட்டத்தை உடனே வழக்கத்துக்குக் கொண்டுவர வேண்டுமென இந்திய அரசாங்கத்தினரை இது வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றது.

12. பெண்களுக்கு ஆடவரைப்போலவே தாயபாகம் வழங்கவேண்டும் என இக் கழகந் துணிகின்றது.

13. கைம்பெண் மணம் முதனூல் முடிபுக்கு ஒத்ததே என்றும், அறிவுக்கும் ஒழுக்கத்துக்கும் ஒத்துவாராதனவை முதனூன் முடிபாயினும் இப்போது ஒப்புக்கொள்ள முடியாதென்றும், இக் கழகத்தினர் கருதுவதுடன், தலைவர்களும் பொதுமக்களும் ஒத்துழைத்துக், கைம்பெண் மணத்துக்கான நன்முயற்சிகளைச் செய்யவேண்டுமெனவும் இது கேட்டுக் கொள்கின்றது.

(கைம்பெண் மணம் வழக்கத்துக்கு வந்தாலன்றி நம் நாட்டு மங்கையர் துயர் தீராது; கள்ளப் புணர்ச்சி, கருச்சிதைவு, தற்கொலை முதலியவற்றால் நம் அருமைப் பெண்மக்கள் படும் பெருந்துயர் கண்டுவைத்தும், அவர்களைத் தாலியறுத்தும், மொட்டையடித்தும், வெள்ளைப் புடைவையுடுப்பித்தும், உணவெடுக்கவொட்டாது பட்டினியும் பசியுமாய்த் தனியே கிடக்கவைத்தும் அவர்களை வாழ்நாள் முழுதும் வருத்திவருதல் அருள் உடையார் செயலாகாது. கைம்பெண் மணம் வழக்கத்துக்கு வந்தால் தான் ஆண்டில் முதிர்ந்த கிழவர்கள், பதினான்கு ஆண்டுச் சிறுமிகளை மணக்குந் தீய வழக்கம் ஒழியும். கிறித்துவர், மகமதியர், பாரசிகர் முதலான மற்றைப் பெரும் பகுதியினரான மக்களெல்லாங், கணவனிழந்த மகளிரை உடனே மறுமணஞ் செய்வித்துப் பாவமும் பழியுமின்றி நன்கு வாழ்தலை நேரே கண்டும், நம்மனோர் இந் நன்முறையைக் கைப்பற்றாதது பெருங் குற்றமாம். மறுமணஞ் செய்தல் நம்மிற் பண்டிருந்த வழக்கமே யாதல், ஆரிய வேதநூல் வல்லாரான தயானந்த சரசுவதி சுவாமிகளால் "சத்தியார்த்தப் பிரகாசிகை" யில் நன்கெடுத்து விளக்கப்பட்டுளது.)



14. சாதிக்கலப்பு மணம் மிகவும் ஏற்றதேயென இக்கழகம் முடிவு கட்டுகின்றது.

(சைவசமயாசிரியர் சைவ நாயன்மார்கள் வரலாறுகளை உள்ளவாறே எடுத்துக்கூறும் பெரியபுராண மென்னும் உண்மைநூலை உற்றுநோக்கினால், அதில் மக்கள் முன்னேற்றத்துக்கு வேண்டிய எல்லாவகையான சீர்திருத்த முறைகளையும் நம் ஆசிரியர்கள் முன்னமே செய்துவைத்திருத்தலைக் காணலாம். கோயில் அந்தணர் குலத்திற் பிறந்தவரான சுந்தரமூர்த்தி நாயனார், தம் குலத்தவரல்லாத பரவை சங்கிலி நாச்சியார்களை மணந்தமை எவரும் அறிந்ததேயாம். புறச்சமயத்திற் சென்ற திருநாவுக்கரசு நாயனார் திரும்பவுஞ் சைவசமயத்திற் புகுந்தமை அறியாதார் யார்? திருஞானசம்பந்தப் பெருமான், பாணச் சாதியாரான திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் அவர் மனைவியாரையுந் தம்மொடு கூடவேவைத்து அன்பினால் அளவளாவியதல்லாமலுந், தாம்சென்ற இடங்கடோறும் அவர்களையும் உடனழைத்துச் சென்றமையும் அவர் வரலாற்றினால் நன்கறியக் கிடக்கின்றதன்றோ? இங்ஙனமே ஈழக்குலச் சான்றாராகிய ஏனாதி நாயனாரையும், வேட்டுவராகிய கண்ணப்பரையும், செம்படவராகிய அதிபத்தரையும், இடையராகிய ஆனாயரையும், பறையராகிய நந்தனாரையும், குயவராகிய திருநீலகண்டரையும், வண்ணாராகிய திருக்குறிப்புத்தொண்டரையும், எண்ணெய் வாணிகராகிய கலியரையும், பௌத்தராகிய சாக்கியரையும், இன்னும் இவர் போன்றார் பலரையும், ஆசிரியர் சுந்தரமூர்த்தி நாயனார் வணங்கிப்பாடி யிருப்பதோடு, அவர்களின் திருவுருவங்களுந் திருக்கோயில்கடோறும் வைத்து வணங்கப்படுகின்றன அல்லவோ? இவ்வளவு சிறந்த சீர்திருத்தங்கள் இக்காலத்தவராற் புதியனபோற் சொல்லப்படினும், நம் சைவசமயப் பெரியாரால் பன்னூறாண்டுகட்கு முன்னமே வெறும் வாய்ப்பேச்சாய் இல்லாமற் செய்கையிலேயே காட்டப்பட்டு நிலைபெற்றிருத்தலைக் கண்டாயினும், நம்மவர்கள் சீர்திருந்துவார்களாக! அன்பொழுக்க அருளொழுக்கங்களோடொத்த எல்லாச் சீர்திருத்தங்களும் முன்னமே சைவசமயாசிரியர்களாற் செய்யப்பட்டிருத்தலை நன்குணர்வார்களானாற் புது நாகரிகக்காரர்கள் சைவசமயாசிரியரைச் சிறிதுங் குறைகூறார். பிற்காலத்தில் ஆரியப்பார்ப்பனர் தம்மை உயர்த்தித் தமிழர்கள் எல்லாரையுந் தாழ்த்தி, அவர்களைச் சாதிச்சண்டை சமயச்சண்டை

களில் நுழையவிட்டுத், தாம் அவர்களுக்குத் தலைவராக நின்றுகொள்ளு தற் பொருட்டே கட்டிவைத்த பொய்யான சைவ வைணவ புராணகதை களே, சைவசமயாசிரியர் செய்த சீர்திருத்தங்களுக்குப் பெருந்தடையாய் நிற்கின்றனவென்றும், பொய்யும் புரட்டும் மலிந்த புராணகதைகளை இறு கப்பிடித்திருக்கும் பௌராணிக சைவமானது சைவசமயாசிரியரும் சைவ சந்தானாசிரியர் மெய்கண்டதேவரும் நிலைநிறுத்திய சைவசித்தாந்தத்துக் குச் சிறிதும் உடன்பாடாகாதென்றும், பண்டை ஆசிரியர்கொண்ட சைவ சித்தாந்த உண்மைகளையே எங்கள் ஆசிரியர் மறைமலையடிகள் சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளாக எங்கும் பரவச்செய்து வருகின்றாரென்றும், போலிச்சைவர்களும் புதுநாகரிகக்காரர்களு முணர்ந்துகொள்வார்களாக!)

IV தமிழ்.

15. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்மொ ழிக்கே முதன்மை இருத்தல்வேண்டுமென்றும் அங்ஙனம் செய்தலையே தமது கடனாகக் கொள்ளல்வேண்டுமென்றுஞ் செட்டிநாட்டுத் தமிழ்மன் னராகிய ஸர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களை இக் கழகம் வேண் டிக் கொள்ளுகின்றது.

16. சென்னைப் பல்கலைக் கழகத்தார் தமிழ்மொழிக்கு இன்னுந் தலைமை தராதிருப்பதற்காக இக்கழகத்தார் வருந்துவதுடன், தமிழ்நாட் டிலே தமிழுக்கே முதன்மை இருக்கவேண்டுமென வற்புறுத்தி, இனித் தமிழை உயர்தனிச் செம்மொழியாகக் கொண்டு செய்யவேண்டுவனவற் றைச் செய்ய முற்பட வேண்டுமெனவும் அவர்தம்மை இக்கழகம் வேண்டு கின்றது.

17. தமிழைத் தனிப்பாடமாக பி. ஏ. சிறப்பு வகுப்புக்கு (B. A. Honours Course) ஏற்படுத்தல் வேண்டுமெனச் சென்னைப் பல்கலைக் கழகத்தாரையும், பொதுவாக எல்லாக் கல்லூரித் தலைவர்களையுஞ் சிறப் பாகப் பச்சையப்பன் கல்லூரித் தலைவரையும் இக்கழகம் கேட்டுக்கொள் கின்றது.

---

## வாழ்த்துப்பாக்கள்

### தமிழ்ப்பிரமசூத்திராசிரியர், சுவாமி விருதைச் சிவஞானயோகிகள் இயற்றியது

உலகெலா மாக்கி யழித்து மறைத்து
நலம்பெற வருளும் நண்ணரு மண்ணல்
எல்லாம் வல்ல இறைவன் எங்கும்
சிவனலிற் சிவனெனுந் திருப்பெயர் மருவிய
ஒருவன் முப்பொரு ளுணர்த்தும் போதம்



எண்ணில் கோடி யுகங்களின் முன்னர்
நந்திக் குணர்த்திய நம்பனை யன்பர்
கண்டு தெளிந்து கவின்பெறச் சென்னை
மூதூ ரடுத்த போதார் சோலை
நல்லோர் திகழும் பல்லா வரத்தில்
ஆங்கிலஞ் செந்தமிழ் ஆங்கடல் பருகி
அருங்கலைப் பெருஞ்சொல் லருண்மழை பொழிந்தின்
அறிவுப் பயிர்வளர்த் தருஞ்செயல் புரிந்து
நிறைமொழி சான்ற மறைமலை யடிகள்
நிலைமுறைக் கிணங்கத் தலைமை பூண்டே
இனிது நிகழ்த்தும் பொதுநிலைக் கழக
நிலையத் தம்பல வாணர் கோயில்
திருக்குட முழுக்குத் திகழ்ந்தது சிறக்க!
அணிமிகு மணிமொழி நூல் நிலையத்தின்
திறப்பு விழாநனிச் செவ்விது நடைபெற!
பொதுநிலைக் கழக விருபத் தாண்டு
நிறைவு விழா நல மோங்கி நிகழ!
அடங்கற் பொழிலும் ஆட்டுபவன் யான்
என்றுகாட்ட மன்றில் நடக்கும்
கூத்த னடிமலர் போற்றிப் புகழ்ந்து
பல்லாயிர முறை பணிந்து பணிந்து
பொதுநிலைக் கழகம் பொலிந்து வாழ்க!
கழகத் தலைவ ரெக்காலும் வாழ்க!
பெருஞ் சொல்லாளர் பிறங்கி வாழ்க!
கேட்டுக் களித்த கேண்மையர் வாழ்க!
பொருளீந் துதவி புரிந்தோர் வாழ்க!
என்று வாழ்த்தி யிறைஞ்சுகின் றோமே.

---

### பலவான்குடி, திருவாசகமடாலயம், திருவாளர் பொன்னம்பல சிவம் அவர்கள் இயற்றியவை

திருவளர் பல்லாவரப் பெருஞ் சபைக்குத் திறமிகு தலைமையைத் தாங்கி, உருவளர் பெரியார் மறைமலையடிகள் ஒளிர்வது தமிழ்த் தெய்வமேயோர், அருள்வளர்வடிவு கொடுகொலுவதனி லமர்ந்ததை யொத்ததா லறிஞர், தருவளர் உரைக ளத்தெய்வ நமக்குத் தண்ண ருள் வழங்க லொத்தனவே.

சீர்மிகு பல்லா வரத்தினில் வாழு மறைமலை யடிகளின் சிறந்த, நார் மிகு பெருஞ்சொற் பொழிவையுந் துருவி நாட்டுறு மெழுத்தையு முருவத், தேர்மிகுதியையுங் கண்டுநல் வாணி யயன்மத னிவருடல் வெளுத்து, நீர்மிகு பூவி லொளித்துரு வொழித்து நின்றன ரென் றிடலாமே.

சாமி வேதாசலமாம் பேரறிஞர் தனிச்சொற்பொழி
வாமிதன் றீஞ்சுவை யொவ்வேமொவ் வேமென வங்குயில்கள்
மாமரந் தேடி யொழிந்தன பாரீயில் மாய்கின்றது
சேம நெடுங்கழை யாலையிற் பாய்ந்து சிதைந்தனவே.

பொதுநிலைக் கழகம் வாழ்க புனிதமா சைவர் வாழ்க
மதியருட் குருவா நங்கண் மறைமலையடிகள் வாழ்க
விதுவருட் குணத்தர் யாரும் வேறறக் கலந்து வாழ்க
நதிமுடிப் பரமன் வாழ்க நாயன்மார் வாழ்க வாழ்க.

---

கீழைச்சிவல்பட்டி எஸ். எம். எஸ். கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
யாழ்ப்பாணம்: வ. மு. இரத்திநேசுவரையரவர்க ளியற்றியவை

1 துறைபல கொண்ட துகடீர் பெருஞ்சொன்
மறைமலைப் பேருடை மன்ன!—இறைசிவன்
என்னப் பரப்பிடு மின்ப வுரைப்பெருமை
கன்னற்பா கேய்ந்ததே காண்.

2 சைவத்தைச் செந்தமிழைச் சார்ந்த வுயர்வுதரு
தைவத்தைப் போற்றித் தழைகவெனப்—பைவைத்த
பாம்பணி சங்கரன் பாத மலர்பணிவாம்
எம்பலொடெந் நாளு மினிது.

---

சருந்திட்டைக்குடி திருவாளர் வி. சாமிநாத பிள்ளை
அவர்கள் இயற்றியது

வாழிபொது நிலைக்கழகம் வாழியவம் பலவாண
வள்ளல் வள்ளல்
வாழியம்மை வாழிமணி மொழிநிலையம் வாழிவிழா
வாழி யுற்றோர்
வாழிமறை மலையடிகள் வாழிபெருஞ் சொன்மாரி
வழங்கு மன்பர்
வாழியிவை வயங்கிடவே பொருளருளுந் திருவாளர்
மகிழ்ந்து மாதோ.

---



## கோயிலுக்கு வரவு

| | | | |
|---|---|---|---|
| 1. சேலம் செவ்வாய்ப்பேட்டை, திருவாளர் அ. நாகப்ப செட்டியார், திரு. பேராஞ்செட்டியார், திரு. மாணிக்கம் மூவரும், அம்பலவாணர், அம்மை, சம்பந்தர், மாணிக்கவாசகர் திருவுருவச்சிலை நான்கும் அமைப்பதற்குச் சேர்ந்துதவிய தொகை ரூபா. | 250 | 0 | 0 |
| 2. சென்னை, புரசபாக்கம், திருவாளர் திவான்பகதூர் வே. மாசிலாமணிப் பிள்ளை யவர்கள், பி.ஏ., பி.எல்., அப்பர் அடிகள் திருவுருவச்சிலைக்கு உதவியது | 50 | 0 | 0 |
| 3. ஆர்க்காடு, ஜவுளிக்கடை, திருவாளர் T.S.G. வரதராஜலு செட்டியார் சுந்தரமூர்த்திகள் திருவுருவச் சிலைக்கு உதவியது. | 50 | 0 | 0 |
| 4. சென்னை, மூட்டைக்காரன்தெரு, திருவாளர் M. நடராஜனவர்களும், சென்னை, சூளை, இம்பீரியல் டைப் பவுண்டரி திருவாளர் C. I. தங்கவேலு முதலியாரவர்களும் தலைக்கு நூறுநூறு ரூபாயாக விமானச்செலவுக் குதவியது. | 200 | 0 | 0 |
| 5. நஞ்சை இடையர், வியாபாரி, திருவாளர் N. C. முத்துசாமிக் கவுண்டர் கோயிற்செலவுக்காக உதவியது. | 25 | 0 | 0 |
| ஆக மொத்தம் | 575 | 0 | 0 |

## செலவு

| | | | |
|---|---|---|---|
| ஆறு திருவுருவங்களும், மூன்று விமானங்களும் அமைப்பதற்கும், விமானங்களுக்கு வர்ணம், மினுக்கெண்ணெய் பூசுதற்கும், கோயிற் சில்லரைச் செலவுகளுக்கும் ஆன தொகை ரூபா. | 575 | 0 | 0 |

---

## கழக மாணவர்களின் காணிக்கை வரவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. | P. L. இராமசாமி, பாகல்பட்டி ரூபா | 12 | 0 | 0 |
| 2. | ,, | S. மாசிலாமணி, பரங்கிமலை | 6 | 0 | 0 |
| 3. | ,, | கா. கங்காதரீசுவரர், காட்டூர் | 6 | 0 | 0 |
| 4. | ,, | N. கிருஷ்ணபிள்ளை, மன்னூர் | 10 | 0 | 0 |
| 5. | ,, | வை. தூக்கியதிருவடி, திருவையாறு | 6 | 0 | 0 |
| 6. | ,, | வை. பொன்னம்பலம், திருவையாறு | 10 | 0 | 0 |
| 7. | ,, | வே. நாகலிங்கம், வட்டுக்கோட்டை | 100 | 0 | 0 |
| 8. | ,, | K. சந்திரசேகரன், B.A., பல்லாவரம் | 12 | 0 | 0 |
| 9. | ,, | சோமசுந்தர முதலியார், பறங்கிமலை | 12 | 0 | 0 |
| 10. | ,, | சொக்கலிங்க முதலியார், பறங்கிமலை | 6 | 0 | 0 |
| 11. | ,, | கு. நடேசநாயகர், சோழங்கநல்லூர் | 10 | 0 | 0 |
| 12. | ,, | அ. மாணிக்கஞ்செட்டியார், சேலம் | 12 | 0 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | திரு. | சோ. க. கோவிந்தராச நாயகர், சோழங்கநல்லூரர் | 12 | 0 | .. |
| 14. | ,, | அங்கப்ப குருக்கள், பாலக்காடு | 6 | 0 | 0 |
| 15. | ,, | மெ. சி. மாணிக்கஞ் செட்டியார், தேவகோட்டை | 6 | 0 | 0 |
| 16. | ,, | V.S.செங்கல்வராயபிள்ளை, M.A., திருநெல்வேலி | 10 | 0 | 0 |
| 17. | ,, | C.N. முத்துரங்கமுதலியார், B.A., மயிலாப்பூர் | 100 | 0 | 0 |
| 18. | ,, | மறைமலையடிகள் கல்விக்கழகம், பறங்கிமலை | 25 | 0 | 0 |
| 19. | ,, | பண்டிதர். V.S. இராச ஐயனூர், சுன்னாகம் | 10 | 0 | 0 |
| 20. | ,, | அ. நாகப்பச்செட்டியார் குடும்பம் | 71 | 0 | 0 |
| 21. | ,, | சி. பழனிக்குமாரன், ஆலமரத்துப்பட்டி | 25 | 0 | 0 |
| 22. | ,, | சிவநேசன், செவ்வாய்ப்பேட்டை | 10 | 0 | 0 |
| 23. | ,, | M. A. S. முத்துப்பிள்ளை, தூத்துக்குடி | 25 | 0 | 0 |
| 24. | ,, | S. V. K. V. காசிவிசுவநாதன், இரங்கூன் | 75 | 0 | 0 |
| 25. | ,, | வ. திருவரங்கம் பிள்ளை, பாளையங்கோட்டை | 25 | 0 | 0 |
| 26. | ,, | ந. சிவகுருநாத பிள்ளை, தூத்துக்குடி | 5 | 0 | 0 |
| 27. | ,, | M. கதிர்வேலு, வட்டுக்கோட்டை | 12 | 0 | 0 |
| 28. | ,, | ஈர. ஆறுமுகம் பிள்ளை, தாராபுரம் | 25 | 0 | 0 |
| 29. | ,, | நாகமைய செட்டியார், சேலம் | 10 | 0 | 0 |
| 30. | ,, | மணி. திருநாவுக்கரசு முதலியார், சென்னை | 20 | 0 | 0 |
| 31. | ,, | S. கந்தையா, கொழும்பு | 20 | 0 | 0 |
| | | மொத்தம் | 694 | 0 | 0 |
| | | கழக மாணவர்களின் உணவுச்சீட்டுக்குக் கழிவு | 42 | 0 | 0 |
| | | மாணவர்கள் செலுத்திய குருகாணிக்கை மிச்சம் | 652 | 0 | 0 |

---

கழகவிழாச் செலவுக்கு நன்கொடை வரவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | | திருவாவடுதுறை ஆதீனபண்டார சந்நிதிகள் ரூபா | 100 | 0 | 0 |
| | | கோயம்புத்தூர் | | | |
| 2. | திரு. | V. E. வெள்ளியங்கிரிக் கவுண்டர் | 50 | 0 | 0 |
| 3. | ,, | ராவ்சாகிப், T. A. இராமலிங்கம் செட்டியார், B.A., B.L., | 25 | 0 | 0 |
| | | சென்னை | | | |
| 4. | ,, | M. துரைசாமி முதலியார், Piece goods merchant | 50 | 0 | 0 |
| 5. | ,, | மாணிக்க முதலியார், Proprietor, Nelson and Co., Type Foundry, சூளை | 50 | 0 | 0 |
| 6. | ,, | மோசூர் கந்தசாமிமுதலியார், B.A., Lecturer in Tamil, பச்சையப்பன் கல்லூரி | 30 | 0 | 0 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | திரு. | ச. நடேச முதலியார், இராயப்பேட்டை, ஜவுளிக்கடை | 25 | 0 | 0 |
| 8. | ,, | C. S. சுவாமிநாத முதலியார், B. A., 'Tharaka Vilas' இராயப்பேட்டை | 25 | 0 | 0 |
| 9. | ,, | V. M. சீநிவாச முதலியார் | 25 | 0 | 0 |
| 10. | ,, | L. சின்னசாமி ரெட்டியார், ஜமீன்தார், லத்திவாடி, நாமக்கல் | 50 | 0 | 0 |
| | | கோட்டையூர், இராமநாதபுரம் ஜில்லா | | | |
| 11. | ,, | வெ. நா. லட்சுமணஞ் செட்டியார் | 25 | 0 | 0 |
| 12. | ,, | பெ. லெ. பெ. அழ. பெத்தாச்சி செட்டியார் | 25 | 0 | 0 |
| 13. | ,, | அ. சு. அ. அழகம்மையாய்ச்சி | 25 | 0 | 0 |
| | | கோட்டாறு | | | |
| 14. | ,, | மா. சிதம்பரகுமாருமுப்பனூர் Trustee, | 25 | 0 | 0 |
| 15. | ,, | C. வைத்தியநாதன் செட்டியார் | 25 | 0 | 0 |
| 16. | ,, | பி. வேலாயுத முதலியார் | 25 | 0 | 0 |
| 17. | ,, | S. V. L. RM. நாராயணன் செட்டியாரவர்கள், Banker, வேலூர் | 25 | 0 | 0 |
| 18. | ,, | சு. மகாலிங்க முதலியார், வடசேரி, நாகர்கோயில் | 25 | 0 | 0 |
| 19. | ,, | T. N. பொன்னையா அவர்கள், சுன்னாகம் | 25 | 0 | 0 |
| 20. | ,, | முரு. மு. முரு. பார்வதி ஆய்ச்சி, பள்ளத்தூர் | 25 | 0 | 0 |
| 21. | ,, | N. சின்னகண்ணுப் பிள்ளை, தூத்துக்குடி | 25 | 0 | 0 |
| 22. | ,, | தெ. ப. ழ. சித. சதாசிவன் செட்டியார், கொத்தமங்கலம் | 25 | 0 | 0 |
| 23. | ,, | தெ. வெ. அ. கதி. அண்ணாமலைச் செட்டியார், காங்கேயம், ஈரோடு. | 25 | 0 | 0 |
| 24. | ,, | திருநாவுக்கரசர் செந்தமிழ்ச் சங்கம், வரப்பாளையம், தாராபுரம் | 25 | 0 | 0 |
| 25. | ,, | ஜலகண்டபுரம், சன்மார்க்கசபை | 25 | 0 | 0 |
| | | செவ்வாய்ப்பேட்டை, சேலம் | | | |
| 26. | ,, | சின்னத்தம்பி யவர்கள் | 25 | 0 | 0 |
| 27. | ,, | ஆ. நா. ஆ. பொன்னுசாமி நாய்க்கர் | 25 | 0 | 0 |
| 28. | ,, | பரிமளகண்டர், நுஞ்சைஇடையர் | 25 | 0 | 0 |
| | | மொத்தம் | 880 | 0 | 0 |

வரவு

| | | | |
|---|---|---|---|
| மொத்த நன்கொடை ரூபா | 880 | 0 | 0 |
| சில்லரை நன்கொடை | 759 | 8 | 0 |

| | | | |
|---|---|---|---|
| உணவுச்சீட்டு | 258 | 0 | 0 |
| நுழைவுச்சீட்டு | 67 | 0 | 0 |
| நூலுக்கு | 14 | 0 | 0 |
| கழக மாணவர் உணவுக்கு | 42 | 0 | 0 |
| ஆக மொத்த வரவு | 2020 | 8 | 0 |

திருவிடைமருதூர் திரு. பொ. குப்புசாமிபிள்ளை யவர்கள் வாழையிலை, வாழைக்காய், தேங்காய் முதலியன நன்கொடையாக அனுப்பினர்.


## செலவுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| உணவுக்காக ரூபா | 333 | 7 | 10 |
| தாள், அச்சு முதலியவற்றிற்கு | 243 | 8 | 3 |
| தபால், தந்தி, பார்சல் முதலியவற்றிற்கு | 91 | 8 | 1 |
| நிழலுருப்படங்களுக்கு | 34 | 0 | 0 |
| திருவரங்கம்பிள்ளையவர்கள் நன்கொடை திரட்டப்போய்வந்த வழிச் செலவும், இளவழகனார் வழிச்செலவுஞ் சம்பளமும் | 203 | 0 | 10 |
| கோயிற்செலவு | 17 | 12 | 8 |
| வேலையாட்களுக்குச் சம்பளம் | 29 | 14 | 0 |
| வெள்ளையடிப்பு, வர்ணம் முதலியவற்றிற்கு | 10 | 12 | 0 |
| பந்தற்காரர்க்கு | 6 | 12 | 0 |
| நன்கொடையாளர்க்குத் தந்த ஞானசாகரம், புத்தகங்கட்கு | 22 | 0 | 0 |
| பொற்காசு, துணி முதலியவற்றிற்கு | 72 | 14 | 6 |
| விளக்குக்கு | 35 | 9 | 3 |
| பூவிற்கு | 18 | 2 | 0 |
| மணல்வண்டிக்கு | 2 | 10 | 0 |
| வண்ணான், அம்பட்டன் | 4 | 7 | 0 |
| நாற்காலி விரிப்புவாடகை | 29 | 0 | 0 |
| விரிவுரையாளர்க்கு | 174 | 8 | 0 |
| சில்லரைச் செலவு | 17 | 4 | 0 |
| ஆகச் செலவு மொத்தம் | 1347 | 2 | 5 |
| மொத்த வரவு ரூபா | 2020 | 8 | 0 |
| செலவு மொத்தம் | 1347 | 2 | 5 |
| பொதுநிலைக்கழகவெளியீடுகட்காகவும், தனித்தமிழ்க் கல்லூரிக்காகவுங் கழக ஆசிரியர்பா லுள்ள மிச்சம் | 673 | 5 | 7 |

விரிவுரையாளரிற் சிலர் வண்டிச் செலவுக்கும் நன்கொடைக்குந் தமக்குச் சேரவேண்டிய தொகைகளை ஏற்றுக்கொள்ளாமல், நமது பொதுநிலைக்கழக வெளியீடுகட்குந் தனித்தமிழ்க் கல்லூரிக்கும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும்படி அன்புகூர்ந்து தெரிவித்தமையால், அத்தொகைகள் மேற்காட்டிய மிச்சத்திற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.



ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள், பொதுநிலைக்கழக ஆசிரியர்.



ஆசிரியர் மறைமலையடிகளின் பொதுநிலைக்கழக நிலையம்;
மேலே தெரிவன; அம்பலவாணர் திருக்கோயிலும், மணிமொழி நூல்நிலையமும்.

பல்லாவரம்

## பொதுநிலைக்கழக இருபதாமாண்டு நிறைவுவிழாப் பேரவையின் தலைமைப் பேருரை

(ஆசிரியர் மறைமலையடிகளால் நிகழ்த்தப்பட்டது)

## அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையும் ஞானயோகமும்

"எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்
இயலுண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும்
மெய்ப்பொருளாம் சிவம்ஒன்றே என்றறிந்தேன் உனக்கும்
விளம்புகின்றேன் மடவாய்நீ கிளம்புகின்றாய் மீட்டும்
இப்பொருள்அப் பொருளென்றே இசைப்ப தென்னே
பொதுவில்இறைவர்செயும்திருநிசய இன்பநடந்தனைநீ
பைப்பறவே காணுதியேல் அத்தருணத் தெல்லாம்
பட்டநடுப் பகல்போல வெட்டவெளி யாமே"

= இராமலிங்க அடிகள்.

இராமலிங்க அடிகளார் அருளிச்செய்த மேலைத் திருப்பாட்டினை மேற்கோளாக எடுத்துக்கொண்டு "அம்பலவாணர் திருக்கூத்தி னுண்மையும் ஞானயோகமும்" என்னும் எமது விரிவுரையினை நிகழ்த்துவான் புகுகின்றேம். அறிவில்லா எவ்வகைப்பட்ட பொருள்களி னகத்தும் புறத்தும், அறிவுடைய எவ்வகை யுயிர்களின் அகத்தும் புறத்தும் நிறைந் திருப்பதும் இயற்கை யுண்மையும் இயற்கையறிவும் இயற்கையின்பமும் உடையதாகி ஓவாது இயங்குந் திருக்கூத்தை இயற்றுவதும் ஆன உண்மைப் பொருளாஞ் சிவம் ஒன்றே முழுமுதற்கடவுளாகும் என்பதூஉம், இதனுண்மையையுணர்ந்து அவ்வாற்றாற் சிவவயமாய் நின்றவர்க்குத் தாம் பேரின்பத்தை யடைந்த அவ்வளவில் மனவமைதி பெறாது தாம் பெற்ற பெறலரும் பேற்றை அது பெறாத எனை மக்களும் பெறும்படி அவர்க்கு அதனை யெடுத்துக்கூறும் அருளிரக்க முண்டா

இருத்தலின் அவையே போதும், அவற்றினும் வேறாகக் கடவுளென்று வேறோ ரறிவுப்பொருள் வேண்டப்படுதல் எற்றுக்கு எனச் சாங்கியமதத்தார் கூறுபவரேலோ வெனின்; அவர் கூற்றும் அடாது; ஏனென்றால், அறிவில்லாப் பொருளின் நிலைகளும், அவற்றின் எல்லை காணப்படாத பரப்புகளும், அப் பரப்புகளில் எல்லையில்லாமல் அடங்கிக் கிடக்கும் எண்ணிறந்த பொருள்களுஞ் சிற்றறிவு சிறுதொழில்களுடைய சிற்றுயிர்களால் எங்ஙனமியக்கப்படக்கூடும்? இந்த நிலவுலகத்தின் ஒரு சிறிய விடத்திலிருக்கும் ஒருவன், சிலகாலிருந்து சிலகாலத்தின் மாய்ந்துபோகின்றவனும், தான் உயிரோடிருக்குங் காலத்திலும் பலவகை நோய்களாற் பற்றப்பட்டு அந்நோய் தீர்த்தற்குப் பலவகை மருந்துகளாகிய பருப்பொருளுதவியை வேண்டி நிற்பவனும், தான் உயிர்பிழைத்து வாழ்தற்கு அரிசி பருப்பு பால் நெய் முதலான பருப்பொருட்பண்டங்களினுதவியை இன்றியமையாது வேண்டி நிற்பவனும், தன் கண்ணெதிரே அருகிலிருக்கும் இடங்களையும் பொருள்களையு மன்றித் தன் கட்பார்வைக்குப் புறத்தே அருகிலிருக்கும் பொருள்களையுந் தன் கட்பார்வைக்கெட்டாத் தொலைவிலுள்ள பொருள்களையுங் காணமாட்டாதவனும், நேரே அருகில் உள்ள பொருள்களுள்ளும் மிகச் சிறியனவா யிருப்பனவற்றைத் தெரிந்துகொள்ள மாட்டாதவனும், மிகப் பெரியனவாயிருக்குஞ் சுமைகளையும் பொருள்களையும் பிறருடைய பிறகருவிகளினுடைய உதவியின்றி அசைக்கமாட்டாதவனும் இருத்தலின், இவனது அறிவிற்கும் இவனது ஆற்றலுக்கும் எட்டாத இந் நிலவுலகமாகிய பெரும் பருப்பொருளை இவன் றன்னறிவுகொண்டுந் தன்வலிமைகொண்டும் எங்ஙன மியக்கமாட்டுவான்? பருப்பொருளாகிய இந் நிலவுலகஞ் சிறிது அதிர்ந்தாலும், இதன்கண் உள்ள எரிமலைகள் வெடித்து நெருப்பைக் கக்கினாலும், இதன்கணுள்ள ஆறுங் கடலும் வெள்ளம் பெருகினாலும், இதன்கண் உலவுங் காற்றுச் சூறாவளியாய்ச் சுழன்று அடித்தாலும் மக்களாகிய சிற்றுயிர்களும், இச் சிற்றுயிர்களா லமைக்கப்படும் நாடுநகரங்கள் மாடமாளிகைகளும் பொடிப்பொடியாய் நுறுங்கிச் சாம்பலாய் வெந்து புழுதியாய்ப் பறந்து அழிந்துபோவதை எங் கண்ணெதிரே ஒரோவொரு காலங்களில் ஒரோவோர் இடங்



களிற் காண்கின்றோமல்லேமோ? 'சான்பிரான்சிஸ்கோ' வென்னும் அமெரிக்காவிலுள்ள மாப்பெரு நகரமும், இத்தாலிதேயத்திலிருந்த 'மெசீனாப்' பட்டினமுஞ், சிறிது காலத்திற்குமுன் ஜப்பான் தேயத்தில் 'டோக்கியோ' பட்டினமும் நிலஅதிர்ச்சியாலும் எரிமலை நெருப்பாலும் அடியோடழிந்து எரிந்து கரிந்தகாலத்தில் அங்கங்கிருந்த மக்களெல்லாரும் பட்ட பெருந்துன்பத்தை அறியாதார் யார்? மக்கள் அவைதம்மைத் தடுக்கவல்ல ஆற்றலுடையராயிருந்தால் அவ் வழிவுகள் நிகழாமல் தடைசெய்திருக்கலாமன்றோ? இங்ஙனம் இந் நிலவுலகத்தின் ஒரோவொரு பகுதிகளில் நிகழும் அழிவு நிகழ்ச்சிகளையே அவை நிகழாமல் தடைசெய்யவும், அழிந்து நீரிலமிழ்ந்திப்போன நிலப்பகுதிகளை மீண்டும் மேற்கொணர்ந்து நிலைநிறுத்தவுஞ், சிறிதும் ஆற்றலில்லாத நம் மக்கள் இந் நிலவுலகத்தைத் தாமாகவே ஆக்கவும் அழிக்கவும் நிலைநிறுத்தவும் வல்லர் ஆவர் என்று உரைப்பதினும் புல்லியவுரை வேறுண்டோ சொல்லுமின்! தமதுடம்பு பழுதுபட்டவிடத்து அதனையே ஆக்கிக்கொள்ளமாட்டாத நம்மனோர், எண்ணிறந்த பிறவுயிர்களுக்கு எண்ணிறந்த உடம்புகளைப் படைத்துக்கொடுக்க வல்லராதலும், அவ் வுடம்புகளொடு கூடியிருந்து இவ்வுலகத்து இன்பங்களை அவை நுகருமாறு பலவேறு பண்டங்களை யமைத்துவைக்க வல்லராதலும், அவ்வுடம்புகளும் அப்பண்டங்களும் இருத்தற்கு இம் மாப்பெரு நிலவுலகத்தைப் படைக்க வல்லராதலும் யாங்ஙனங்கூடும்? பாருங்கள்! இந்நிலவுலகத்தளவிலேயே ஆற்றல் மிகக் குறைந்தவராய் நிலையின்றி உயிர்வாழும் நம்மனோர், இந்நிலவுலகத்துக்கும் எட்டா நெடும் பெருந் தொலைவிலே இடைவெளியிற் சுழன்று செல்லும் பகலவன் மண்டிலந், திங்கள்மண்டிலஞ், செவ்வாய்மண்டிலம், புதன்மண்டிலம், வியாழன்மண்டிலம், வெள்ளிமண்டிலஞ், சனிமண்டிலம் முதலான வெவ்வேறு பேருலகங்களையும், இவற்றிற்கும் நெடுந்தொலைவிலே இவற்றினும் பல்லாயிரமடங்கு பெரியனவாய்ச் சுழன்றுசெல்லும் எண்ணிறந்த வான்மீன் மண்டிலங்களையும் எங்ஙனம் படைக்கவும் இயக்கவும் வல்லராவர்? இத்தனைகோடி யுலகங்களையுஞ் சிற்றுயிர்களாகிய நாம் படைக்கமாட்டுவேம், இயக்கமாட்டுவேம், அழிக்கமாட்டுவேம் என்று எவரேனுங் கூற முன்வருவராயின்,

லாவற்றின் வெளியிலு மிருக்கின்றான்" என்று இவ்வுண்மையினையே நன்கெடுத்து மொழிவதாயிற்று.

இனி, இங்ஙனம் பொருள்களின் உள்ளும் புறம்பும் உயிர்களின் உள்ளும் புறம்பும் நிறைந்திருப்பானான இறைவனியல்பு உணர்த்துவான் புகுந்து, அவன் இயற்கையுண்மையும் இயற்கையறிவும் இயற்கையின்பமும் வாய்ந்தானாகி யிருப்பனென அடிகள் மொழிந்திட்டார். இறைவனியல்பு இப்பெற்றியதாமெனவே, இறைவனது உதவியை அவாய் நிற்கும் பொருள்களும் உயிர்களும் அங்ஙனம் இயற்கையிலேயே உண்மையும் அறிவும் இன்பமும் வாயாவாயிருக்கு மென்பதும் அறிவித்தாராயிற்று. இனி, இம் மூன்று தன்மைகளின் இலக்கணங்களும், பொருள்களும் உயிர்களும் இவைதம்மை இயற்கையிலே யுடையவாகாமையும், இறைவனொருவனே இவைதம்மை இயற்கையே யுடையனாதலும், இறைவனைச் சார்ந்தே உயிர்கள் அவை மூன்றும் நிலையாக எய்தப் பெறுதலும் முறையே விளக்கிச் செல்வாம்.

முதற்கண் 'உண்மை' என்பது 'என்றும் ஒருபடித்தாய் நிற்கும் மாறாநிலையே' யாகும். நமதறிவுக்குப் புலனாகும் பொருள்களுள் ஒன்றாயினும் மாறாநிலையினதாய் ஒருபடித்தாய் நிற்கக்காண்கின்றோமா? இல்லை, இல்லை. நாம் உயிர்வாழ்தற்கு இடமாயுள்ள இம் மண்ணுலகு எத்தன்மையதா யிருக்கின்றது? ஒருகாலத்து மேடாயிருந்தது பள்ளமாகின்றது, பள்ளமாயிருந்தது மேடாகின்றது; பண்டைக்காலத்திற் சிறந்த நாகரிகமுடையதாய் விளங்கிய குமரிநாடு இப்போது கடலுள் அமிழ்ந்திக் கிடக்கின்றது; கடலுள் மறைந்துகிடந்த எத்தனையோ நிலப்பகுதிகள் இப்போது கடல்நீருக்குமேற் பல தீவுகளாய்க் கிளம்பியிருக்கின்றன; எத்தனையோ ஆயிர ஆண்டுகளுக்குமுன் நாகரிகத்திற் சிறந்த மக்களால் எகுபதிநாட்டில் அமைக்கப்பட்ட பெரியபெரிய நகரங்களும் அந்நகரங்களி லமைக்கப்பட்ட பெரியபெரிய அரண்மனைகளும் பெரிய பெரிய கோயில்களும், அங்ஙனமே சாலடிநாட்டில் 'ஊர்' என்னுந் தலைநகரில் எடுப்பிக்கப்பட்ட மிகப் பெரிய அரண்மனைகளும் மிகப் பெரிய கோயில்களும், அங்ஙனமே நமது இவ்விந்தியநாட்டின் வடமேற்பகுதியிற் குடியேறிய பண்டைத் தமிழ் மக்களால் தலைநகராக அமைக்கப்பட்ட 'அரப்பா' என்னும் இட-



மும் அதன்கண் இருந்த அரண்மனைகள் கோயில்களும் மண் மூடுண்டு, இப்போது மேல்நாட்டு நன்மக்களால் நிலத்தினின்றும் அகழ்ந்தெடுத்துக் காட்டப்படுகின்றன. முன்னொருகால் மேல்நாடு முழுமையுந் தம் செங்கோல் நீழலில் இனிது வைக அரசு செலுத்திய உரோம வேந்தர்க்குத் தலைநகரா யிருந்த பழைய உரோம நகரின் மிக வியக்கத்தக்க மாடமாளிகைகள் அழிந்து பாழாய்க் கிடத்தலை இப்போதுந் திரள்திரளான மக்கள் சென்று பார்த்து வருகின்றனர். இங்ஙனமே இத் தமிழ்நாட்டகத்தும் பழங்காலத் திருந்த தமிழ்வேந்தர் அமைத்த அரண்மனைகளுந் திருக்கோயில்களும் இடிந்து பாழாய்க்கிடத்தல் திருவாரூர், கங்கைகொண்ட சோளேச்சுரம், மகாபலிபுரம், செஞ்சி, வேலூர் முதலிய இடங்களில் இன்றும் எல்லாருஞ் சென்று பார்த்துவருகின்றனர். வைகை முதலிய யாறுகளும் முற்காலத்து ஓடிய வழி மாறி ஓடுகின்றன. மிகப் பழைய நாளில் வடநாட்டில் ஓடிய சரசுவதி என்னும் யாறு இப்போது இல்லாமலே போயிற்று. முன்னில்லாத பல யாறுகள் பின்னர்ப் புதியவாய்த்தோன்றி ஓடா நிற்கின்றன. நாம் உறையும் இந்நிலமண்டிலமே வரவரக் குளிர்ந்து வருகின்றதென்றும், இன்னும் பல்லாயிர நூற்றாண்டுகள் கழிந்த பின் மக்களும் பிறவுயிர்களும் உயிர்வாழ்தற்கே இசையாதாய் இது மாறுமென்றும் நிலநூல்வல்லார்கள் பெரிதாராய்ந்து உரைக்கின்றனர்.

இப்போது நமக்கு இரவில் ஒளியைத் தரும் நிலாமண்டிலமானது பன்னூறாயிர ஆண்டுகளுக்குமுன் உயிர்வாழ்க்கைக்கு இடமாயிருந்து, பின்னர் வரவரக்குளிர்ந்து உயிர்வாழ்தற்கு ஏலாத இயல்பினதாய் மாறியிருக்கின்றதென வான்நூலாசிரியர்கள் நுவல்கின்றனர். இன்னும் நம் கண்களுக்கு ஆலம்வித்துப் போலவும் மின்மினியொளி போலவுந் தோன்றுகின்ற எத்தனையோ பெரிய பெரிய உலகங்களிற் பற்பல முன்னரே அழிந்துபட்டனவாயும், வேறுபல புதிது தோன்றினவாயும், மற்றும் பல அழிந்தொழியும் நிலைமையில் இருப்பனவாயும் பற்பல மாறுதல்கட்கு உட்பட்டனவாய்ச் செல்கின்றனவென்னும் உண்மை வான்நூல்ஆராய்ச்சியாற் புலனாய்க்கொண் டிருக்கின்றது. நாம் நுகரும் பண்டங்கள் நாம் புழங்கும் ஏனங்கள் முதலாயின வெல்லாம் நாளேற நாளேறத்

தமது கட்டுச் சிதைந்துந் தேய்ந்தும் அழிந்துபோதல் போலவும், நமக்கு நெருங்கிய தொடர்புடை நம்முடம்பும் நாளேற நாளேற நரை திரை மூப்புப் பிணிகள் உடையவாகிக் கட்டுத் தளர்ந்து நம்மைவிட்டு அழிதல்போலவும், இவ்வுலகமும் இவ்வுலகத்தைச் சூழ்ந்த எண்ணிறந்த உலகங்களும் அவற்றின்கண் உள்ள அளவிலாப் பண்டங்களும் ஒருகாற்றோன்றிச் சிலகால் இருந்து பிறிதொருகாற் கட்டுக்குலைந்து காணாமற்போய்விடுகின்றன. ஆகவே, மிகச் சிறியது முதல் மிகப் பெரிய தீறான எல்லாவகையான உயிரில்லாப் பொருள்களும் ஒரேநிலையாக இருக்கமாட்டாதனவாய்ச் சிதைந்தொழிந்து போதலால், அவைகளை ஒரே நிலையிலுள்ள உண்மைப்பொருள்களாகக் கூறுதல் இயலாது.

இனி, உயிருடைய பொருள்களின் நிலை சிறிது ஆராயற்பாற்று. உயிருடையவைகள் எல்லாம் அறிவுடையனவாய் இருந்தும், அவற்றின் அறிவு என்றும் ஒரேதன்மையதாகச், சுருங்குதல் விரிதலின்றி என்றும் ஒரே அளவினதாக, அகவிருளால் இடையிடையே பற்றப்படாதனவாக விளங்கக்கண்டதுண்டோ? நாம் சிறு மகவாயிருந்த ஞான்று நமதறிவு எந்நிலையிலிருந்த தென்பது நமக்கே விளங்கவில்லை. ஆனாலும், எத்தனையோ சிறுமகவுகளை நாம் நம் கண்ணெதிரே கண்டு, அவற்றின் இயல்பை உற்றுநோக்குதல் கொண்டு, அவற்றின் அறிவு ஏதோ ஒரு பேரிருளாற் கவரப்பட்டிருக்கின்றதென்றுந், தாய்தந்தையர் உடன்பிறந்தார் நேயர் ஆசிரியர் முதலான பிற அறிவுடையுயிர்களின் சேர்க்கையிலிருந்து அம் மகவுகள் சிறிது சிறிதாக அவ் விருள்நீங்கி அறிவு விளங்கப்பெற்று வருகின்றன வென்றுந் தெரிந்துகொள்கின்றோமாதலால், நாமுஞ் சிறு குழவிகளாய் இருந்த ஞான்று ஏனைக் குழவிகளைப்போலவே நம்மை இன்னாரென்றும், நம்மைச் சூழ்ந்தவர் இன்னாரென்றும், நம்மைச் சுற்றியுள்ள பண்டங்கள் இன்னவையென்றும் உணரமாட்டாதவர்களாயிருந்தோம் என்பதை ஐயமறத் தெளிந்துகொள்கின்றோம். இதுமட்டுமோ, நாம் ஆண்டில் முதிர்ந்தவர்களாய்க் கல்விப்பயிற்சியாற், பேரறிஞர் சேர்க்கையால் அறிவு விளங்கப்பெற்ற பின்னும், நமதறிவு ஒரு தன்மைத்தாய் விளங்குவதின்றிப் பலவேறு மாறுதல்களின் வயப்பட்டு, நம்மை இடையிடையே துன்புறுத்திவரக் காண்கின்றேம் அல்லேமோ?



நேற்று அறிந்தவைகளிற், சென்ற கிழமையில் அறிந்தவைகளிற், போன திங்களில் அறிந்தவைகளிற், கடந்த ஆண்டு அறிந்தவைகளில் எத்தனைகோடி நினைவுகள் எத்தனைகோடி எண்ணங்கள் நம்மறிவுக்குத் தென்படாமலே மறைந்துபோயின! முன்னறிந்தவைகளை இங்ஙனம் நாம் மறந்து மறந்து போதலால் நமக்கு வரும் இடர்களுக்கு, நம்மாற் பிறர்க்குவரும் இடர்களுக்கு ஒரு கணக்குண்டோ! முன்னறிந்தவைகளை மறத்தலால், நிகழ்ந்தவைகளை நிகழ்ந்தபடியே சொல்லமாட்டாதவர்களாய்ப், பார்த்த பொருள் கேட்டபொருள் சுவைத்தபொருள் இயல்புகளை அப் பார்த்த கேட்ட சுவைத்தபடியே நினைவுகூர்ந்து சொல்லமாட்டாதவர்களாய்ப் பொய்த்துப் பிழைபடுகின்றனம் அல்லமோ?

கடந்தவற்றையறியும் அறிவிற்றான் இத்தகைய மாறுதல்கள் நிகழ்கின்றன வென்றாலும், இப்போது நம் கண்ணெதிரே நிகழ்வனவற்றிலாவது நமதறிவு பொய்படுதலின்றி மெய்யாக அறிதல் செய்கின்றதா? அதுவும் இல்லையே! நாம் நேரே காண்கின்றபொருளையும் ஆராய்ந்து பார்த்தாலன்றி ஐயமறத் தெளியமாட்டாதவர்களாய் இருக்கின்றோம். ஒரு துண்டு செம்பையும் ஒரு துண்டு பொன்னையும் பளிச்சென்று தோன்ற விளக்கிக் கையிற் கொடுத்தால், அவை யிரண்டற்குமுள்ள வேறுபாடு தெரியாமல் எத்தனைபேர் ஏமாந்துபோகின்றனர்! தித்திப்பான நாரத்தம்பழங் கொடிமுந்திரிப்பழம் முதலியன வாங்குபவரில் எத்தனைபேர் அவற்றை நன்கு ஆய்ந்துபாராமல் வாங்கித், தாம் வாங்கியவை தித்திப்புக்கு மாறான புளிப்புடையவா யிருத்தலைக் கண்டு ஏமாந்துபோகின்றனர்! மருத்துவரில் எத்தனைபேர் நோயாளிகளின் நோயின் றன்மையை யறியாமல் மாறான மருந்துகளைக் கொடுத்து அவர் கொண்ட நோயை மிகுத்து அவரையுங் கொல்கின்றனர்! கணக்கரில் எத்தனைபேர் தவறாகக் கணக்குச் செய்து தாமும் பிழைபட்டுத், தாம் சார்ந்த செல்வரையுங் கெடுத்துவிடுகின்றனர்! சமையற்றொழில் செய்வாரில் எத்தனைபேர் காலமும் இடமும் உணவெடுப்பார் உடல்நிலையும் ஆய்ந்துபாராமல் உணவு சமைத்துக் கொடுத்து, அதனை யுண்பார்க்குப் பல கொடுநோய்களை யெல்லாம் வருவித்துவிடுகின்றனர்! நூல் எழுதுவாரில் எத்தனைபேர் காலப்போக்கும் மக்கள் முன்னேற்றமுங் கருதிப் பாராமற் பய

னற்ற பொருள்களை எழுதி மக்களறிவுவளர்ச்சியைப் பாழ்படுத்துகின்றனர்! அவருள் எத்தனைபேர் தாம் வழங்கும் மொழியைத் திருத்தமாகப் பயிலாமற் சொற்குற்றஞ் சொற்றொடர்க் குற்றம் பொதுள எழுதியும், அயன்மொழிச் சொற்களை அடுத்தடுத்துக் கலந்தும் அதன் தூயவழக்கை மாயவைக்கின்றனர்! இன்னும் இங்ஙனமே நம் மக்களிற் பெரும்பாலார்—அவர் கற்றவராயினுங் கல்லாதவராயினுந், தங் கண்ணெதிரே காண்பனவுஞ் செய்வனவுமெல்லாம் உண்மைக்கு மாறாகப் பிழைபடச் செய்து தாந் துன்புறுவதொடு பிறரையுந் துன்புறச் செய்கின்றனர்! இவ்வாறு இவர்கள் நிகழ்கால நிகழ்ச்சிகளிலேயும் மெய்யொடு திறம்பிப் பொய்படு மறிவினரா யிருக்கக் காண்டலின், இவர்களது அறிவை உண்மை நிலையினதென் றுரைக்க மெய்யறிவுவாய்ந்தார் ஒருப்படுவரோ சொன்மின்கள்!

இனி, இங்ஙனங் கடந்தகால நிகழ்ச்சிகளிலும் நிகழ்கால நிகழ்ச்சிகளிலும் அடுத்தடுத்துப் பிழைபடும் அறிவுடைய இவர்கள், புலனுணர்வு மனனுணர்வுக்கு எட்டாத வருங்கால நிகழ்ச்சிகளை முன்னறிந்து நடத்தல் யாங்ஙனங் கைகூடும்? நாம் நெடுங்காலம் உயிர்வாழ்ந்து இவ்வுலக இன்பங்களைத் துய்ப்போமென்று எண்ணிக்கொண்ட எத்தனைபேர் ஏழையெளியவர்கள் வயிற்றையொடுக்கிச் சேர்த்த பொருளை அவர் கண்ணீர் சிந்தக் கைப்பற்றிக்கொண்டு வந்த அந் நேரத்திலேயே சடுதியில் உயிர்துறந்து பிணமாய்க் கிடக்கக் கண்டதில்லையா? தமக்குமேல் வலிமையுடையவர்களில்லையென்று இறுமாந்து வலியற்றவர்களைத் துன்புறுத்தி வந்தவர்கள் தாம் தம்மினும் வலியாரால் வெட்டப்பட்டு வீழ்ந்து கிடக்கவில்லையா? எத்தனை செல்வர்கள் எத்தனை அரசர்கள் எத்தனை மறவர்கள் தமது நிலையாமையை உணர்ந்து பாராமையால், நாளைக்கு நமது நிலைமை எப்படியாமோ என்ற ஐயுறவு கொள்ளாமையாற் பிறர்க்குத் தீங்கிழைத்துப், பின்னர்த் தாம் இருந்த இடமுந் தெரியாமல் இறந்துபோகின்றனர்! வருங்கால வியல்பை உணர்ந்துபார்க்கமாட்டாத நம் மக்களறிவும் அறிவெனப்படுமா? தன் உடம்பினுள்ளுந் தன்னைச் சுற்றிலும் நிகழப்போவனவற்றையே யறியமாட்டாதான் ஒருவன், தான் ஒருவனே பல்லாண்டு நீடுவாழ்வன் ஏனையோ ரெல்லாம் நீடுவாழார் என நினைந்து



பிறர்க்கு முன் தானே மாய்ந்து ஏமாற்றம் அடைவனாயிற், சிற்றறிவுடைய இம் மகனறிவு உண்மையை யுள்ளபடி யுணரவல்ல உண்மையுடையதாமோ? மக்களின் இச் சிற்றறிவுப் பெற்றி தேற்றுதற்கன்றோ **ஆசிரியர் மெய்கண்டதேவ நாயனார்,**

"அறிந்தும் அறிவதே யாயும் அறியா
தறிந்ததையும் விட்டங் கடங்கி—அறிந்த
தெதுவறிவும் அன்றாகும் மெய்கண்டான் ஒன்றின்
அதுவதுதான் என்னும் அகம்" என்று அருளிச்செய்தார்.

பிற்காலத்தில் **தாயுமான அடிகளும்,**

"இனியே தெமக்குன் அருள்வருமோ வெனக்கருதி
ஏங்குதென் நெஞ்சம் ஐயோ
இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பர் என்று
எண்ணவோ திடம் இல்லையே" என்று அருளிச்

செய்தமை காண்மின்கள்! இங்ஙனமெல்லாஞ் செல்கால நிகழ்கால வருங்கால நிலைகளை உணரும் உண்மையறிவு வாயாமையால், மக்களும் மற்றையுயிர்களும் இயற்கை யுண்மைநிலையுடையவாகாமை தெற்றென விளங்காநிற்கும்.

இதுகாறும் ஆராய்ந்தவாற்றால் உயிரில்பொருள்களும் உயிருள்பொருள்களும் இயற்கையிலேயே உண்மைநிலை யுடையவல்லாமை நன்கு பெறப்படுதலால், உயிர்கள் தாமுந் தம்மை ஓர் அறிவுடைப் பொருளென்று தமதுண்மை உணர்தற்குந், தமக்கு உடம்பும் உலகமும் உகைத்துப் பல்பொருள்களுமாகத் திரிபெய்திப் பயன்படும் மாயையென்று ஒரு பொருள் உண்டு என்று அதன் உண்மையினை அவைகள் அறிதற்குங், கடவுள் என்று ஒரு முழுமுதற்பொருள் என்றும் மாறா இயற்கை யுண்மையுடையதாய், அவை இரண்டனையுந் தொடர்புபடுத்துதற்கு வேண்டுமென்பது இன்றியமையாது பெறப்படும். என்னை? தன்னிலே மாறா உண்மைநிலை யில்லா ஒருவன் பிறர்க்கு ஏதொரு நன்மையுஞ் செய்யமாட்டாமை நமது உலகவாழ்க்கையில் அடுத்தடுத்து நிகழக்காண்டும் அன்றோ? தன் மனக்கினிய நண்பன் பட்ட கடனை நாளைவந்து தீர்த்து அவனைச் சிறைபுகாமற் காப்பேன் என்று உறுதிசொல்லிப் போன ஒரு செல்வன் தான் சொன்ன மொழியுந் தன் நினைவும் மாறிவிடுவனாயின், அவன் அவற்கு

லான ஊர்களிற் பசித்தார் பலர்க்கும் அவன் ஒருவனே ஒரே காலத்தில் உணவளிக்க மாட்டுவனோ? மாட்டானன்றே? ஒன்றைவிட்டொன்று மிக அகன்றிருக்கும் அவ்வவ்வூர்களிலுள்ளவறிஞர்க்கெல்லாம் அங்ஙனம் அவன் ஒரேகாலத்தில் உணவளிக்க வேண்டின், ஆங்காங்கு உணவமைப்பார் பற்பலரை நிறுவிப் பெரும்பொருள் செலவிட்டு அவர் வாயிலாக அங்ஙனஞ் செய்யலாமேயன்றித், தான் ஒருவனாகவே யிருந்து அங்ஙனஞ் செய்யமாட்டுவான் அல்லன். இங்ஙனமே நோய்கொண்டு வருந்துவார்க்கு நோய்தீர்க்கும் மருத்துவனும், ஒருகாலத்து ஓரிடத்துள்ள ஒருசிலர்க்குமட்டுமே நோய்தீர்க்கமாட்டுவானன்றி, ஒன்றினொன்று அகன்றிருக்கும் பற்பல ஊரிலுள்ள பற்பலர்க்கும் ஒரேகாலத்தில் நோய்நீக்கமாட்டுவா னல்லன்; அன்றி அவன் அங்ஙனஞ் செய்ய வேண்டிற் பெரும்பொருள் செலவுசெய்து மருத்துவர் பற்பலரை ஆங்காங்கு ஏவியே நோய்கொண்டார் பல்லாயிரவர்க்கும் மருந்தூட்டி நோய்தீர்க்கற்பாலன். மற்று, எல்லாம்வல்ல கடவுளோ ஓரிடத்தன்றி ஒரூரிலன்றி ஒருலகத்தன்றிப், பல்வேறிடங்களிலும் பல்வேறு ஊர்களிலும் பல்வேறு உலகங்களிலும் நிறைந்து ஆற்றுமணலினும் அளவிடப்படாதனவாய் உள்ள உயிர்த்தொகைகளில், எத்தனைகோடி யுயிர்களை ஒரேகாலத்தில் தோற்றுவிக்கின்றான், எத்தனைகோடி யுயிர்களை ஒரேகாலத்திற் காத்துவருகின்றான், எத்தனைகோடி யுயிர்களை ஒரேகாலத்தில் ஒரு பிறவியினின்று விடுவித்து வேறுபல பிறவிகளில் உய்த்துவருகின்றான், எத்தனைகோடி யுயிர்களை ஒரேகாலத்தில் தன் திருவடிப் பேரின்பத்திற் படிவித்து வருகின்றான்! இங்ஙனமாக எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலுந் தான் ஒருவனாகவேயிருந்து, எல்லா உயிர்களின் இயல்புகளையும் அறிந்து, அவ்வவற்றிற்கேற்ற உதவிகளைத் தான் ஒருவனாகவே செய்துவரும் இறைவன்றன் அறிவாற்றல் எவ்வளவு சிறந்ததாய், எவ்வளவு பேரளவினதாய் இருக்கவேண்டுமென்பதைச் சிறிது எண்ணிப்பாருங்கள்! இத்துணைச் சிறந்த அவனறிவு, நம்மனோர்க்குள்ள அறிவுபோல் ஆணவ வல்லிருளில் மறைந்து இருந்து, பின் அதனினின்றும் விடுபட்டு விளங்குவதாயிருக்கக் கூடுமோ என்பதையும் எண்ணிப் பாருங்கள்! அவனறிவு சிறிது மறைந்திருந்தால், இவ் வுலகமெங்கே, இவ் வுலகத்துள்ள பண்



டங்களெங்கே, புற்பூண்டுகள் எங்கே, பல்வகைப் பிறவிகளெங்கே, பல்வகை யுயிர்களெங்கே, ஞாயிறு திங்களெங்கே, எல்லாம் வெறும் பாழாய் வெட்டவெளியா யிருக்குமல்லவோ? ஆதலால், எல்லாம்வல்ல இறைவனறிவு, நமதறிவுபோல் ஆணவ வல்லிருளிற் சிறிதும் மறையாதாய், என்றும் விளங்கினபடியாயே யிருக்கும் என்பது சிறிதும் ஐயமின்றித் தெளியற்பாலதாகும். இது பற்றியே, அடிகளார் அவன் இயற்கையறிவினனாயே யிருப்பன் என்று மேலைத் திருப்பாட்டில் அருளிச்செய்தாரென் றுணர்ந்து கொள்ளல்வேண்டும்.

இனி, இறைவன் இயற்கையுண்மையினனாயும் இயற்கையறிவினனாயும் மட்டுமே இருப்பனென்று உரைப்பின், இவ்விரண்டு இலக்கணங்களும் மாயை ஆணவங்களுக்கும், மாயை ஆணவங்களினின்று விடுபட்ட உயிர்களுக்கும் முறையே பொருந்துவான் செல்லும். என்னை? உடம்பாயும் உடம்பின் கருவிகளாயும் உலகங்களாயும் உலகத்துப் பொருள்களாயுந் திரிபுறாத மாயையின் பரப்பு இன்னும் எவ்வளவோ பெரிதாய் இருக்கின்றது! இந்நால்வகைக் காரியப் பொருள்களாய்த் திரிந்த மாயையின் பகுதி சிறிதாயும், 'அங்ஙனந் திரியாத பகுதி பெரிதாயும் உளவென்பது ஆராய்ச்சியால் நன்கு புலனாதலின், திரிபில்லாத அதன் முதற் காரணப் பகுதி இயற்கை யுண்மைநிலை யுடையதாதல் தானே பெறப்படுமன்றோ? இங்ஙனமே, பிறவிக்கு வராத உயிர்களும் இன்னும் எத்தனையோ கோடிக் கணக்காய் உள்ளனவாகலின், அவைதம்மைப் பற்றியிருக்கும் ஆணவமலமுங் காரியப்படாததாய் இயற்கை யுண்மைநிலை வாய்ந்ததாதலுந் தானே பெறப்படுமன்றோ? இவைபோலவே, சதாசிவதத்துவத்தில் வைகுஞ் சதாசிவர் முதலாயினார் இயற்கையிலேயே ஆணவமலப் பற்றுப் பெரிதும் அகன்றவராய், இயல்பாகவே பேரறிவுவிளக்கம் வாய்ந்தவராய் இருத்தலின், அன்னார்க்குள்ள அவ்வறிவு இயற்கையே யுண்மைநிலை யுடையதாதலுந் தானே பெறப்படும்; பெறப்படவே, இறைவன் ஒருவனே இயற்கை யுண்மையினனாயும் இயற்கையறிவினனாயும் விளங்குவனென்றசொற் குற்றமுடைத்தாய் முடியுமாம் பிறவெனின்; அற்றன்று, அக் குற்றம் அணுகாமைப் பொருட்டே "இயல் உண்மை யறிவு" என்றவளவில் அமையாது,

"இன்பம்" என்பதொன்றுகூட்டி, "இயல் உண்மை அறிவு இன்ப வடிவாகி" என்று ஓதி, இறைவன் வரம்பிலின்ப வடிவினனாய் நிற்றல் அவற்குச் சிறந்தஇலக்கணமாதல் அடிகள் புலப்படவைத்தார்.

அஃதொக்குமா றென்னை? மாயையிற் றிரண்ட பண்டங்களிற் பல இன்சுவையினவாயும், வேறு பல நறுமணத்தினவாயும், மற்றும் பல இன்னோசையினவாயும், இன்னும் பல அழகியதோற்றத்தினவாயும், பின்னும் பல இனிய மென்மையினவாயும் புகுந்து உயிர்கள்பால் இன்பத்தை விளைக்கக் காண்டலின், மாயையும் இன்பமுடைத் தென்பது போதருமாலோ வெனின்; அஃதொவ்வாது; என்னை? மாயையிற் றிரண்ட பண்டங்கள் அறிவுடைய உயிர்கள்மாட்டு இன்ப துன்பங்களை விளைவித்தற்குக் கருவியாமல்லது, அவைதாமே இன்பதுன்பங்கள் உடையவல்லவாகலின். மாயை அறிவில்பொருளாதல் கண்கூடாக அறியக்கிடத்தலின், அது தானே தனக்கு இன்பமுண்டென்றுதல், துன்பமுண்டென்றுதல் அறிதல் செய்யாது. கனிந்த பலாச்சுளையைத் தேனொடு கூட்டி யுண்டவனுக்கு, அதன் இன்சுவையினால் இன்பம் மீதூரக் காண்டுமேயன்றி, அப் பலாச்சுளையே அவ் வின்சுவை இன்பத்தை எய்தக் காண்டுமில்லையே. ஒரு கூர்ங்கத்தியாற் கை யறுப்புண்டவனுக்கு, அதனால் துன்பம் மீதூரக் காண்டுமே யன்றி, அக்கத்தியே அவன் கையை அறுத்து அதனால் துன்புறக் காண்டுமில்லையே. இவ்வாறே இன்ப துன்ப நிகழ்ச்சிகள் அறிவுடைய வுயிர்கள்பாலன்றி, அவைதம்மை அவற்றின்பால் விளைவிக்கும் மாயையின் காரியங்களில் ஒருசிறிதுங் காண்கிலமாகலின், மாயை அவற்றிற்குக் கருவியேயா மல்லால், அவை தாமே இன்ப துன்பங்கள் உடையவாகா என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்த உண்மையே யாம்.

அஃதொக்குமாயினும், அறிவுடைய உயிர்கள் இன்பம் எய்தக் காண்டலின், அவையும் இன்பமுடைத் தென்பது பெறப்படும்; படவே, இறைவன் ஒருவனே இன்பமுடையன் என்று உரைத்தது இழுக்காமாலோவெனின்; இழுக்காது; என்னை? உயிர்களெல்லாம் மாயையிற் றிரண்ட பண்டங்களை நுகர்தலானும், அழகு அறிவு அன்புடைய பிறவுயிர்களொடு சேர்தலானுமே இன்புறக்காண்டுமல்லது, அவ்விரண்டன் றொடர்பின்றித் தாமே



தனித்திருந்து இன்புறும் ஒரு சிற்றுயிரை யாண்டுங் கண்டிலமாகலின் என்பது. இங்ஙனம் பிறிதொன்று இன்புறுத்தினாலன்றி இன்புறல் அறியாத சிற்றுயிர்களை இயற்கையின்ப முடையன வென்றல் இசையாமையின், முழுமுதற்கடவு ளொருவனே இயற்கையின்ப முடைய னென்பது முடிக்கப்படும்; படவே, அவற்குரிய அச்சிறப்பிலக்கணம் பிறிதெதற்கும் உரிமையாவான் சேறல் இல்லையென்று கடைப்பிடித் துணர்ந்துகொள்ளல் வேண்டும்.

அதுவேயு மன்றிச், சிற்றுயிர்க ளெல்லாந் துன்புறுத்தும் பொருட் சேர்க்கையால் துன்புற்றும், இன்புறுத்தும் பொருட் சேர்க்கையால் இன்புற்றும் வருதல்போல், இறைவன் எதனாலேனுந் துன்புறுத்தப்படுதலும் பிறிதெதனாலேனும் இன்புறுத்தப்படுதலும் இல்லானாய், எஞ்ஞான்றும் இன்பவுருவினனாயே நிற்கும் பெற்றியனாகலின், அவற்குரிய அச் சிறப்பிலக்கணம் பிறிதெதற்கும் உரியதாதல் செல்லாதென்று உணர்தல் வேண்டும். இறைவன் இங்ஙனம் இன்பவுருவினனாயே நிற்குந் தனிப்பேருண்மை அறிவுறுத்துதற்கன்றோ மாணிக்கவாசகப் பெருமான்,

"சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே" என்றும்,

"ஓரின்பவெள்ளத்து உருக்கொண்டு தொண்டரை யுள்ளங் கொண்டார்" என்றும், இங்ஙனமே இராமலிங்க அடிகளார் 'மகாதேவமாலை'யில்,

"தற்போத வொழிவினிடை நிறைந்து பொங்கித்
ததும்பிவழிந் தோங்கியெலாந் தானேயாகிச்
சிற்போதத் தகம்புறமுங் கோத்துநின்ற
சிவானந்தப் பெருக்கே மெய்ச் செல்வத்தேவே" என்றும் அருளிச்செய்திருத்தலும் நினைவிற்பதிக்கற்பாற்று.

அற்றேல், இறைவனோடொத்த அறிவினராக ஓதப்படுஞ் சதாசிவர் முதலாயினர் மாட்டும் இயற்கையின்பம் உளதாகல் வேண்டுமா லெனின்; அற்றன்று, சதாசிவர் முதலியோர்க்குந் தலைமை செலுத்துதலால் உண்டாகுஞ் செருக்காகிய 'அதிகார

இன்னும், அறிவுடையோன் என்று உயர்த்துச் சொல்லப் படுபவன், தான் உணர்ந்தபொருள்களின் வடிவங்களையொத்த உருவங்களைத் தன் அறிவின்கண் ஐயந் திரிபின்றி அமைத்துக் கொண்டவனேயாவ னென்பதூஉம், அறிவில்லாதோன் என்று இழித்துச் சொல்லப்படுபவன் தான் கண்ட எந்தப்பொருளின் வடிவத்தையுந் தன்னுள்ளத்தின்கண் அமைத்துக்கொள்ள மாட்டாதவனேயாவ னென்பதூஉம், இறைவனறிவு இம் மாயையிற் காணப்படும் எல்லா வடிவுகளையும் முன்னரே யறிந்த உருவுக ளுடையதா யிருப்பினல்லது இப்பருப்பொருள் வடிவுகள் தாமே தோன்றாவாகலின் இறைவனது பேரறிவு இவையெல்லாவற்றை யுந் தன்னகத் தடக்கிய உருவுடையதாயே திகழுமென்பதூஉம் பிறவுங் "கடவுளுக்கு அருளுருவம் உண்டு" என்னும் எமது கட்டுரையில் நன்கு விளக்கியிருக்கின்றேம்; அவ்விரிவை அதன்கட் காண்மின்கள்!

அஃதொக்கும்; இறைவனறிவு உருவுடையதாயே நிற்கு மெனின், அதனை அருவென்று கூறுதல் என்னை யென்பார்க்கு, உயிர்களும் உயிர்களின் அறிவுங் கண்முதலிய பொறிகளுக்குப் புலனாகாமைபற்றி அருவென்றும், உயிர்களின் அறிவு கட்புல னாகாவிடினும் புறப்பொருள்களில் தான் கருதிய வடிவினை அமைத்தல்கண்டு அதனறிவு அவ்வடிவினையொத்த உருவுடைய தென்றுங் கொள்ளுதல்போல, இறைவனும் இறைவன்றன் பேர் அறிவும் பொறிகளுக்குப் புலனாகாமை பற்றி அருவென்றும், அங்ஙனமாயினும் அவன்றன் பேரறிவு எண்ணுதற்கடங்கா இத்தனை யுலகங்களையும் இவ் வுலகங்களிலுள்ள இத்தனை பண்டங்களையும் இவற்றிலிருந்து இவைதம்மை நுகர்தற்கு எண்ணிறந்த உயிர்களொடு கூடிய இத்தனையுடம்புகளையும் அமைத்திருத்தல் கொண்டு இவற்றின் வடிவுகட்கு முதலான உருவுகள் வாய்ந்த பேரறிவினனேயே அவனிருப்ப னென்றும் விடுத்தல் வேண்டும். எனவே, அறிவெல்லாம் அழியா வுருவங்க ளுடையவாயே யிருக்கு மென்பதூஉம், அன்னவாயினும் அவை ஊனுடம்பில் அமைந்த பொறிகளின் வாயிலாக அறியப்படாமல் மாசற்ற அறிவுக்கண் கொண்டே காணப்படு மென்பதூஉம் நினைவிற் பதிக் கற்பாலனவாகும். திருஞானசம்பந்தர் மூன்றாட்டைச் சிறுமக



வாயிருந்த ஞான்று கண்டுபாடிய இறைவனுருவம், அவர் தந்தையார் கண்களுக்குப் புலனாகாமல் அவர்க்குமட்டும் புலனான தன்மையை யுற்றுநோக்குங்கால், அவர் கண்ட இறைவனுருவம் அறிவுருவமே யல்லாது ஊனுருவம் அன்றென்பதூஉம், அவரதனைக் கண்டதுந் தமது அறிவுக்கண் கொண்டே யல்லாது ஊனக்கண் கொண்டன்றென்பதூஉம் பகுத்துணர்ந்துகொள்ளல் வேண்டும். இறைவனுருவம் இப்பெற்றியதாதல்கண்டே **அருணந்திசிவனார்**,

"மாயைதான் மலத்தைப்பற்றி வருவதோர் வடிவமாகும்
ஆயஆணவம் அகன்ற அறிவொடு தொழிலையார்க்கும்
நாயகன் எல்லாஞானத் தொழின்முதல் நண்ணலாலே
காயமோ மாயையன்று காண்பது சத்திதன்னால்" என்றும்,

"சத்திதன் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும்" என்றும் அருளிச்செய்வாராயினர். ஆகவே, இறைவனது பேரறிவு நிலையையுணர்வாராகிய மக்களின் சிற்றறிவுக் கண்ணுக்கே அவன் அருவமாகப் புலனாகாதுநிற்பன்; மற்று, அவன் அருளைச்சார்ந்து, அதனால் மாசுதீர்ந்து தூயரான அன்பரின் தூயஅறிவுக்கு, அவன்றன் தூய அறிவுருவநிலை முற்றும் புலனாவாறேயாய் விளங்கா நிற்குமென்று உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

இனி, "மெய்ப்பொருளாஞ் சிவம் ஒன்றே" என்றது, மேற்காட்டியவாற்றான் மாறுந் தகைபவான பொருள்களும் உயிர்களும், மாறாநிலையினதான சிவத்தை நோக்க மெய்யல்லாதனவாதல் பெறப்படுதலாற், சிவம்ஒன்றே மெய்ப்பொருளாதல் தெருட்டியவாறு. அற்றேற், சிவமல்லாத பொருள்களெல்லாம் பொய்யென முடிந்து ஏகான்மவாதமாம் பிறவெனின்; அங்ஙனமன்று, நிலைமாறாததே மெய்யென்றும், நிலைமாறுவதே பொய்யென்றும் உலகவழக்கானுஞ் சான்றோர் நூல்வழக்கானும் நன்கறியக்கிடத்தலின், என்றுமில்லாத வெறும் பாழையும் பொய்யையும் ஒன்றென்றல் அடாது. "நில்லாதவற்றை நிலையினவென் றுணரும், புல்லறிவு" என்னுந் திருக்குறளும் இக் கருத்தேபற்றி யெழுந்ததாகும் அல்லதூஉம், இல்லாத வெறும் பாழைப்பற்றிப் பேசுவாருங் கேட்பாரும் யாண்டு மிலராகலானும், உயிர்களும் பொருள்களு மிருந்தே முப்பொருளாராய்ச்சி நிகழவேண்டுமாகலானும், நிலைமாறவன உள்பொருள்களே யல்லால் இல்பொருள்களாதல் செல்லாமையானும், இதன்கண் ஏகான்மவாதங் கூறுவாருரை ஒருசிறிதும் பொருந்ாதெனை விடுக்க.

'சிவம்' என்னுஞ்சொற் செம்மை யென்னும் பண்படியாகப் பிறந்து சிவந்த நிறத்தையும், இன்பத்தையும் உணர்த்துஞ் சிறந்த தமிழ்ச்சொல் லாகலானும், இறைவன்றன் அறிவுருச் சிவந்த நிறத்தினதாயும் இன்பநிலையினதாயும் இருக்கும் உண்மையினை நமக்கு

நினைவுறுத்திக், காணவுங் கருதவும் படாத முதல்வன்றன் அறிவுருவினை நாம் காணவுங் கருதவும் எளிதாம்படி வைத்து நமக்கு நினைவொருமையினைப் பயப்பிப்பதில் இச்சொற் போலக் கடவுளுக்குரிய வேறெச்சொல்லும் உதவிபுரிவ தின்மையானும், சிவம் என்னும் இச் சொல்லையே கடவுளுக்குச் சிறந்தபெயராக வைத்துப் பண்டைக்காலந்தொட்டு இன்றுகாறும் ஆன்றோர்கள் வழங்கி வருதலானும், ஈண்டு அடிகளாரும் அச் சொல்லையே சிறந்ததாக எடுத்து அருளிச்செய்வாராயினர். அடிகளார் பிறாண்டுஞ் "சிவம் பிரமமுடியே" என்று ஓதியதூஉங் கருத்திற் பதிக்கற்பாற்று.

இனிச், சிவம் ஒன்றே மெய்ப்பொருள் என்று ஆழ்ந்தாராய்ந்துகண்ட தொல்லாசிரியர்களும், அவர்வழி பிழையாதுவந்த அடிகளாருந் தாங் கண்ட அவ் வரும்பேருண்மையினை, மக்களெல்லாரு முணர்ந்து உய்தல் வேண்டுமென் றெழுந்த பேரிரக்கத்தால் அடுத்தடுத் தெடுத்துணர்த்தி வரவும், அதனைக் கடைப்பிடியாது, பிறந்து பெருந் துன்பங்களிற் பட்டுழன்று இறந்து ஒழிந்த அரசர்களையும் இழிந்த மக்களையு மெல்லாந் தெய்வங்களாக வழிபட்டுப் பிறவியைப் பாழ்படுத்தி இருள் நிரயத்திற்குஞ் செல்லுங் கீழ்மக்களை அது செய்தலாகா தென்று, மேலைச் செய்யுளின் பின்னிரண்டடிகளில் தடுத்தருளினார்.

இனி, மேலைச் செய்யுளின் இறுதிப்பகுதியில், இறைவன் எல்லாவுயிர்களின் அகத்தே நெஞ்சத்தாமரையின் அறிவுவெளியிலும், புறத்தே எண்ணிறந்த வுலகங்கட்கெல்லாங் களைகண்ணும் அருள்வெளியிலும் பொதுநின்று இன்ப ஆடல்புரியும் இயல்பினை, ஞானாசிரியன் மெய்யுரை வழிநின்று மூச்சை யடக்கி, மூலத்திலுள்ள குண்டலியை யெழுப்பி, அதனோடு உணர்வினை ஒருங்கிணைத்துக் கொண்டு, நெஞ்சத் தாமரையின் அகத்தே சென்று கண்டு இன்புறும் ஞானயோகப் பயிற்சி யுடையார்க்கு, எல்லா அறிவும் எல்லா இன்பமும் ஒருங்கெழுந்து பெருகித் தோன்றும் என்றருளிச் செய்து முடித்தமை காண்க! இவ்வுண்மை ஆசிரியர் திருமூலர் அருளிச்செய்த,

"நாசிக்கு அதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெயுந்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாகுமே" என்னுந் திருப்

பாட்டானும் நன்கு தெருட்டப்பட்ட தென்க.

210464

விழாவைக், கழக ஆசிரியரையே அவைத்தலைவராக எழுந்தருளவைத்து இனிது நடத்தலாம். இங்ஙனம் அதனைத் தங்களூரில் நடத்த விரும்பும் அன்பர்கள் அதனை உடனே கழக ஆசிரியர்க்குத் தெரிவித்து அதற்காம் முயற்சிகளை விரைவில்தொடங்கல்வேண்டும். இருபத்தோராமாண்டுவிழா எல்லார்க்கும் விடுமுறைகாலமான டிசம்பர், 26,27,28-க்குச் சரியான பிரசோற்பத்தி மார்கழி, 11, 12, 13-ஆம் நாட்களில் நடைபெறும்படி ஏற்பாடு செய்தல் வேண்டும். மேற்குறித்த செலவைத் தவிரக், கழக வெளியீடுகட்குந் தனித் தமிழ்க் கல்லூரி வைப்பிற்கும் பயன்படும்படி ஆயிரரூபாய்க்குக் குறையாமல் நன்கொடை சேர்த்து, அவ்வூரவர் கழக ஆசிரியர்க்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெளியூர்களில் நடத்துவதற்கு இவ்வாறெல்லாம் முயன்று, உதவத்தக்கவர்கள் எவரும் முன்வராவிட்டாற், பல்லாவரம் பொதுநிலைக்கழக நிலையத்திலேயே இருபத்தோராம் ஆண்டு விழாவையும் நடத்துவதற்கு வேண்டும் ஏற்பாடுகள் மூன்று திங்களுக்கு முன்னமே செய்து, விளம்பரங்கள் வாயிலாக அறிவிக்கப்படும்.

நமது பொதுநிலைக்கழகம் இத் தமிழ்நாட்டகத்துள்ள எல்லாச் சாதியார்க்கும் எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவாகப் பயன்படும்படி, பழமையை ஒட்டிய சீர்திருத்த முறையில் நடத்தப்படுதலாலுங், கழக ஆசிரியர் மறைமலையடிகள் தமிழுக்குங் கடவுளுக்கும் மக்கள் முன்னேற்றத்திற்குஞ், சென்ற முப்பத்தைந் தாண்டுகளாகச் செய்துவரும் அறிவுத் திருத்தொண்டு, இத் தென்னாட்டையும் இலங்கை யாழ்ப்பாணத்தையும் உள்ளடக்கிய தமிழகம் முழுமையும் நடைபெற்று வருதலாலுஞ், சென்ற ஆண்டு விழாவிற்கு இத் தமிழகமெங்குமுள்ள அன்பர்கள் வந்து பயன்பெற்றாற்போலவே, இனி நடக்கவிருக்கும் இருபத்தோராம் ஆண்டு விழாவிற்குந் தமிழகத்துள்ளார் எல்லாரும் வந்து பெறற்கரும் பெரும்பயன் பெற்று இனிது வாழ்வார்களாக!

---

## கழகப் பேரவையின் விரிவுரைகள்

பொதுநிலைக்கழக 20-ஆம்ஆண்டு விழாப் பேரவையின்கண் அறிஞர்கள் நிகழ்த்திய விரிவுரைகளையெல்லாம் ஒருங்குசேர்த்துப் பதிப்பிட்டு நூல்வடிவில் வெளியிடுதற் கெண்ணிக், கழக ஆசிரியர் தமது எண்ணத்தைத் தம் அருமைப் புதல்வர் திரு. மறை. திருநாவுக்கரசு வாயிலாகத் திருப்பனந்தாள் மடப் பண்டார சந்நிதிகளுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள். பண்டார சந்நிதிகளும் அதனை ஏற்று, அந் நூற்பதிப்புக்கு ஆம் செலவைத் தாம் உதவியருள்வதாக அவர் வாயிலாகவே விடைவிடுத் தருளினார்கள். அதன்மேற் கழக ஆசிரியர் அதனைப் பதிப்பிடுதற்கு ஆஞ் செலவு ஆயிரத்து முந்நூறுரூபா ஆகுமென்று பண்டார சந்நிதிகளுக்குத் தெரிவித்துளார்கள். பண்டார சந்நிதிகளிடமிருந்து அத்தொகையுதவி கிடைத்தபின், விரிவுரைப்புத்தகம் அச்சிட்டுவெளியிடப்படும்.

நமது கழகவிழாவுக்குப் பொருளுதவிசெய்த அன்பர்கள் "விரிவுரைப் புத்தகம்" ஏன் அனுப்பவில்லையென்று அடுத்தடுத்து எழுதிக் கேட்டலாற், கழக அறிக்கையினையே பயன்படும்முறையில் விரித்தெழுதிக், கழகஆசிரியர் நிகழ்த்திய அரிய பெரிய தலைமைப் பேருரையாகிய அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையும் ஞானம்யாகமும் என்பதனையும் பதிப்பிட்டுச் சேர்த்து இதனை வெளியிடலானேம். இதன் விலை ஒருரூபா ஆதலால், நூலுக்கென்று ஒரு ரூபா அனுப்பினவர்களும், உணவுச்சீட்டு நுழைவுச்சீட்டுப் பெற்றவர்களும், நன்கொடையாளரும் இதனையே அதற்கு ஈடாகப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இந்நூலுங் கழக ஆசிரியர் இயற்றிய மற்றை நூல்களும் பல்லாவரம், பொதுநிலைக்கழக நிலையத்துப் புத்தகசாலையிற் கிடைக்கும்; வேண்டுவோர் நூல் விலையையுந் தபாற்கூலி கட்டுக்கூலியையும் முன் அனுப்பியாவது, வி. பி. பி. வழியாவது பெற்றுக்கொள்ளலாம்.

## நன்கொடையாளர்கள்

கழகவிழாவுக்குப் பொருளுதவி செய்த நன்கொடையாளரில் இருபத்தைந்து ரூபாவுக்குக் குறையாமல் உதவிசெய்தோர் பெயர்மட்டுமே, கழக முதல் அறிக்கையில் தெரிவித்தபடி, இதன்கட் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆனாலும், அதற்குக் குறைந்தது உதவினோர்க்கும் பிறர்க்கும் பற்றுச்சீட்டுக் கழக ஆசிரியரிடமிருந்து இதனுடன் அனுப்பப்பட்டிருக்கின்றன. நமது தமிழ்நாட்டின்கண் உள்ள மக்கள் முன்னேற்றத்தின் பொருட்டுக் கழக ஆசிரியர் மேற்கொண்டிருக்கும் அரும்பெருமுயற்சிகள், தக்கபடி பொருளுதவி கிடைத்தால் மட்டுமே நடக்கக்கூடியன; ஆதலால், நன்கொடையுதவும் அன்பர்கள் தக்கபடி நன்கொடையுதவிப் புகழ்புண்ணியங்களைப் பெற்று இன்புறுவாராக! நிலையில்லா மற்போம் நகைக்குந் துணிக்கும், மணச்சடங்கு பிணச்சடங்குகட்கும், பதவிகட்கும் ஏராளமான பொருளைச் செலவழிப்பவர்கள், கையில் இல்லாவிட்டாற் கடன் வாங்கியாயினும் இவற்றிற்காகச் செலவழிப்பவர்கள், இச்செலவில் நூற்றில் ஒரு கூறாயினும் நிலையான நன்முயற்சிக்கு உதவிப் புகழ்பெறல் வேண்டுமன்றோ?

இங்ஙனம்

**வை. தூக்கிய திருவடி.**

பொதுநிலைக்கழக மாணவன்.

---


FRESH STOCK OF ENGLISH BOOKS FOR SALE

# THE SHORT STORIES OF H. G. WELLS

1150 pages, cheap edition; price Rs. 6 - 2as.

All the most interesting stories (sixty in number) of this famous novelist, scientist and historian are brought together in this volume by the publishers Messrs Ernest Benn, Ltd., London. In other editions, each story of which the present volume consists, is being sold for Rs. 2 - 14as. In order to make them accessible to all, this wonderfully cheap edition is issued.

"H. G. Wells painted cameos unforgettable in their beauty and richness of imagination." by W. D. Bowman in his "The A B C of Short-Story Writing"

"The majority of Wells' Short Stories are extraordinarily clever; here there is a touch of greatness. ....... ..he remains one of the most potent literary forces to-day; a most stimulating and original ideologist." by Dr. A. Compton-Rickett in his "A History of English Literature.

*Another great book of the season*

# THE INDIAN CRISIS

*by F. Brockway, M. P.*

Price Rs. 2. Postage extra for all.

*For copies apply to The T. M. Press, Pallavaram.* Those who want the vols. of World's Classics, Every Man's Library, Wayfarer's Library, Home University Library, etc., may get them at The T. M. Press, by remitting in advance the price at 13as per shilling.